# அறவழி

## NONVIOLENCE

வெளியீடு
அறவழிப்
போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாத இதழ் ⁕ 1987 மாசி பக்கம் 20 ⁕ விலை 3-00 வழி 10


## அறவழியால் மட்டுமே மனித குலத்தைப் பாதுகாக்க முடியும்.

— காந்தி —

ஒவ்வொரு வருடமும் பிறக்கின்றபோது ஒவ்வொரு பெயரை தாங்கி வருகின்றது. சர்வதேச சமாதான ஆண்டு, சர்வதேச வீடமைப்பு ஆண்டு, சர்வதேச குழந்தைகள் ஆண்டு இப்படியே.

1986 ம் ஆண்டு சர்வதேச சமாதான ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. சமாதான ஆண்டிலாவது உலகில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கின்ற பல பிரச்சனைகளுக்கு தீர்வுகள் காணப்படக் கூடும் என மக்களால் எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் கூட, சமாதானத்தினை விரும்பும் மக்களுக்கு அது ஒரு ஏமாற்றமே.

ஒவ்வொரு ஆண்டுக்கும் பெயர் சூட்டி வரவேற்பதும், பிரியா விடை அளிப்பதும் வருடாந்த நிகழ்ச்சியாகி விட்டது. இதனுல் மனித குலத்துக்கு எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை.

உலகில் வன்முறை அதிகரிக்கின்றது. ஆயிரக் கணக்கான மக்கள் வன்முறையில் கொல்லப்படுகிறுர்கள். மீதி மக்களோ சதா பயத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பசி, பஞ்சம், பட்டினி, வறுமை, வேலையின்மை போன்ற மனிதனின் அடிப்படைப் பிரச்சனைகள் அன்றுடம் அதிகரித்து வருகின்றன. அதேவேளை ஆயுத உற்பத்தியில் கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

உலகில் சமாதானம் எவ்வாறு நிலைபெறக்கூடும்; சமாதானம் என்பது ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் உதயமாக வேண்டும்.

ஹிரோசிமா நகரில் ஆயுதமற்ற அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சின் போது, காந்திமகான் கூறியதை நினைவில் கொள்வது மிகப் பொருத்தமாகும்.

''இப்போது அறவழியால் மட்டுமே மனித குலத்தைப் பாதுகாக்க முடியும்'' என்ற காந்தியின் கூற்றுக்கு ஆழமான உருவம் கொடுக்க உலக மக்கள் முன்வர வேண்டும் என அறவழி அறைகூவல் விடுக்கின்றது.

## தமிழ் சிறுவர் தினம்



1986 மார்கழி 15ல் நடைபெற்ற தமிழ் சிறுவர் தின விழா நிகழ்ச்சிப் படங்கள்

**7 வது ஆண்டுச் சிறப்பு மலர்**

# அறநோக்கில்

## நெஞ்சில் நிறுத்தி....!

சமுதாய மாற்ற நிறுவனமாகிய ''அறவழிப் போராட்டக்குழு'' எனும் 'குழந்தை' இன்று தனது ஏழாவது வருட நிறைவைக் கொண்டாடும் பொன்னாள். இப்பொன்னாள் தமிழ் சமுதாயத்தின் வரலாற்றில் மங்காப் புகழ் பெறும் நன்னாள். இந்நாளில், அறவழிக் குழந்தையின் தோற்றம், வளர்ச்சி- வளர்ச்சிப் பாதையில், குழந்தை எதிர் நோக்கிய பிரச்சினைகள், எதிர்ப்புக்கள், விமர்சனங்கள், சொல்லம்புகள், ஊக்கமின்மைகள் எதிர்ப்பதக் கருத்துக்கள்- ஆற்றிய சேவைகள்- ஈட்டிய சாதனைகள், பாராட்டுக்கள் ஆதரவுகள் யாவற்றையும், இவ் இயக்கத்தின் செயலாளர் என்ற வகையிலும் இப்பத்திரிகையின் ஆசிரியர் என்ற வகையிலும் மீட்டிப் பார்க்கிறேன்.

அறவழிக் குழந்தையின் வீரமிக்க துள்ளல் நடையும், நெடிய பார்வையும் மனக்கண் முன்னே பிரகாசமாகத் தெரிகின்றது.

சமுதாயப் பணியில் ஏழு வருடங்களை இவ் இயக்கம் பூர்த்தி செய்துள்ளமையை எண்ணிப் பார்க்கின்ற பொழுது மனதில் மகிழ்ச்சி பொங்குகிறது.

1979 ம் ஆண்டு முதல் 1986 வரை இவ் இயக்கம் தமிழ் மக்கள் மத்தியில் ஆற்றிய பணிகளை நினைவு படுத்திப் பார்க்கின்றேன்.

சாதிக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்கள், ஆலயங்களில் மிருக பலியிடுதல் தடை, சமத்துவ வழிபாடு, பயிற்சி முகாம்கள், நிர்மாணப் பணிகள், அகதிப் பணிகள் ,புனர்வாழ்வுப் பணிகள், வன்செயல்களால் பாதிக்கப்பட்டோர் நிவாரண உதவி, பாலர் பாடசாலைத் திட்டம், வெளியீட்டுப்பணி- சீதனக் கொடுமைக்கு எதிரான போராட்டங்கள்- கருத்தரங்குகள்- மாநாடுகள், இப்படியே பட்டியல் நீண்டு கொண்டு போகின்றது.

அறவழியா? அறவழி என்றால் கேலியும்! சிரிப்பும்! இக் கொள்கையில் நம்பிக்கையில்லை! உடனடி வெற்றியில்லை! பலனில்லை! ஒத்துவராது எனப் பலவாறாகப் பலர் பேசிக் கொண்டவேளை!

தமிழ் சமுதாயம் முன்னேற வேண்டுமெனில், அதன் மத்தியில், காலம், காலமாக புரையோடிப் போயிருக்கின்ற சமூக அநீதிகள், உயர்வு- தாழ்வுகள் களையப் படுதல் வேண்டும் என்ற பெரும் எண்ணம், தொலை நோக்குப் பார்வை கொண்ட, சில இளைஞர், யுவதிகள் மத்தியில் முளைவிட ஆரம்பித்தது.

சமூக அநீதிகளைக் களைவதற்கு அறவழி தான் சிறந்த மார்க்கம் என சமுதாய ஆர்வலர்கள், சிந்தனையாளர்கள், அனுபவஸ்தர்கள், பொறுப்புணர்வுடன் சிந்தித்த வேளை அது!

காந்தி மகானின், அறவழிச் சிந்தனையாலும், கொள்கைகளாலும் கவரப்பட்ட சில இளைஞர், யுவதிகள்- கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில்- தந்தை செல்வா அறங்காவல் குழுவினால் நடாத்தப்பட்ட அறவழிப் பயிற்சி முகாமின் முடிவில் சமூக விடுதலைக்கான போராட்டத்தினை அறவழியில் முன்னெடுக்க, உறுதி பூண்டனர்.

1979 ம் ஆண்டு அறவழித் தொண்டர்களால் முன்னெடுக்கப்பட்ட கால்கள்- தொடர்ந்து முன்னேறிக் கொண்டு செல்கின்றன. சமுதாய மாற்றப் பணிகள் விருத்தியடைகின்றன.

அறவழியில் பணி செய்பவர்களுக்கு முடிவு முக்கியமல்ல அவர்கள் செல்கின்ற வழிதான் முக்கியம். நாம் தெரிந்தெடுத்த பாதையில் எமக்கு நம்பிக்கை, விசுவாசம், கூடவே ஆண்டவனின் துணையுமுண்டு.

தமிழ் சமுதாயத்தின் எதிர்கால நன்மை, முன்னேற்றம் கருதி நாம் முன்னெடுத்த, முன்னெடுக்கின்ற பணிகள் முயற்சிகள், நல்ல பயன் தரும் பலன்களையும், சாதனைகளையும் ஏற்படுத்தி வருகின்றன.

இக்கட்டத்தில், அறவழிக் குழந்தையால் ஏற்படுத்தப்பட்ட பெருமைகளும் சாதனைகளும் பற்பலவாகும், இத்துறையில் தோளோடு, தோள் சேர்ந்து எம்முடன் நின்று எம்மைச் சரியான பாதைகளில் வழிகாட்டிய அன்பும், மதிப்புமிக்க பெரியவர்கள், ஆதரவாளர்களை, நன்றியுணர்வு மேலோங்க, நெஞ்சில் நிறுத்திப் பார்க்கின்றேன்.

அறவழிப் பாதையில்- நாம் கடந்து வந்த பாதைகளையும், தடைகளையும் மீட்டுப் பார்க்கின்ற போது கிடைத்த அனுபவங்கள்- பாடங்கள் மிகவும் பெறுமதி மிக்கவைகளாகும்.

கைதடி எனும் சிற்றூரில் பிரசவிக்கப்பட்ட அறவழிக் குழந்தை இன்று சர்வதேச மட்டத்தில் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளது. இதன் எதிர்காலம் மேலும் பிரகாசமாகத் தோற்றமளித்து, அணையா விளக்காக ஒளி விடும்.

அறவழிப் போராட்டக்குழுவினால் விதைத்த அறவழி எனும் விதைகள் இன்று முளைவிட்டுப் பயிர்களாக வளர்ந்து கொண்டு இருக்கின்றன. இப்பெறுமதி மிக்க பயிர்களை நீரூற்றி- உரமிட்டு, பாதுகாத்து, சமுதாயத்துக்குப் பயன் தரும் பெரும் மரங்களாக்கும் பணிகள் எம் முன்னுள்ளன. அவ்வாறான பணிகளை மென்மேலும் முன்னெடுப்போம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கைகள் துளிர் விடுகின்றன.

காந்தியம் என்பது மாபெரும் கடல். அதன் ஆழத்தினைக் காண்பது எளிதான காரியமுமல்ல- இருப்பினும் கூட, காந்தியக் கோட்பாடுகளுக்கும்- சிந்தனைகளுக்கும், உயிர் கொடுத்து, சமுதாய மட்டத்தில், எதிர்காலத்திலும் நல்ல பணிகளை ஆற்றலாம் என்ற உறுதி நெஞ்சில் படர்கின்றது.

## ஆசிச்செய்தி

அறவழிப் போராட்டக் குழுவின் சேவை நிறைவையிட்டு, வெளியிடப்படும் மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி இவ் ஸ்தாபனம் முன்னெடுத்துள்ள சமூக அபிவிருத்தித் திட்டங்களின் வளர்ச்சி, பயன்பாடு, நன்மைகளை அறிந்து நான் திருப்தியும் சந்தோஷமும் அடைகின்றேன்.

இச்குழுவின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து, நல்ல சேவையார்வத்துடன் செயற்பட்டு வருகின்ற இதன் செயலாளர், மற்றும் இயக்குனர்களின் பங்களிப்புகளை நான் நேரில் பார்த்துள்ளேன்.

அன்பு– இரக்கம்– பொறுமை– ஒழுக்கம்- கூட்டுறவு- மனிதாபிமானம்- சமாதானம், சகோதரத்துவம், பொறுப்புணர்வு அடிப்படையில் செயற்பட்டு வருகின்ற இந்த ஸ்தாபனத்தின் செயல்பாடுகள் மக்கள் மத்தியில் புகழையுப் கௌரவத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை அனுபவ ரீதியில் அறிவேன் பாலர் கல்வித்திட்டம், எழுத்தறிவுக் கல்வி, சுகாதாரக்கல்வி, முதலுதவிச் சிகிச்சைப் பயிற்சி, புனர்வாழ்வுப்பணி, சுயதொழில் வாய்ப்புப் பயிற்சி, போன்ற திட்டங்களில் குழுவின் சேவை பாராட்டப்படத்தக்கது.

அறவழிப் போராட்டக்குழு எதிர்காலத்தில் மேலும் பல சேவைகளை ஆற்றி, மக்களுக்குத் தொண்டு செய்வதுடன், இவர்களின் புகழ் மேலும் சர்வதேச மட்டத்தில் வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

சீ. எஸ். சுப்பிரமணியம் ஜே. பி.

முதியோர் கல்வி அதிகாரி.

மாகாண ஆணையாளர்

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம்

## பணி தொடரட்டும்

அறவழிப் போராட்டக் குழுவின் ஏழாண்டு கால சேவை நிறைவையொட்டி இவ் ஸ்தாபனத்தினை வாழ்த்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் சமுதாயத்தில் வாழ்கின்ற அடிமட்ட மக்களின் உயர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், இக் குழுவினர் ஆற்றி வருகின்ற தன்னலமற்ற சேவைகளைக் கடந்த காலங்களில் நான் கூர்ந்து கவனித்துள்ளேன்.

இக் குழுவினர் தமிழ் சமுதாயத்தில் இருக்கின்ற சின்னஞ் சிறியவர்களின் கல்வி வளர்ச்சியிலும் அவர்களது ஆற்றல்களை மேம்படுத்த எடுத்துக் கொண்டுள்ள பணிகளையும் நாம் நிச்சயமாகப் பாராட்ட வேண்டியவர்களாவோம்.

ஏழாண்டு காலத்தில், அதிக பிரச்சாரம் இன்றிச் செய்த சேவைகள் எனக்கு நிறைவு தருகின்றது. இவ் ஸ்தாபனத்தின் அரும் பணிகள் மென்மேலும் தொடர ஆண்டவன் துணை புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

## தாத்தா காந்தி கதை கேளு!

தம்பி தம்பி கதை கேளு!
தாத்தா காந்தி கதை கேளு
ஆசியஜோதி என்பவராம்
அந்நியராட்சி வெறுத்தாராம்!
தேசியப் பற்றுக் கொண்டாராம்
தேச விடுதலை வேண்டினராம்;
சத்தியம் தர்மம் சாத்வீகம்
சாந்தி மார்க்கம் தருமென்று
கத்தி குண்டு யுத்த மதை
கனவில் கூட வெறுத்தாராம்!
(தம்பி தம்பி)
சாதி சமயம் பார்க்காது
சர்வோதயம் வளர்த்தவராம்
நீதி நெறிகள் வழி வாழ
நித்திய சேவை செய்தவராம்!
அன்புக் குழந்தைகள் அருகிருக்க
ஆத்ம தூய்மை பெற்றவராம்
உலகம் போற்ற வாழ்ந்து என்றும்;
ஒளியின் விளக்காய்த் திகழ்பவராம்!
தம்பி தம்பி கதை கேளு
தாத்தா காந்தி கதை கேளு
சாந்தி தவழும் புண்ணியனை
மறவோம் என்றும் மறவோமே!

— இராஜி சண்முகநாதன் —

**30-1-87** காந்தி நினைவு தின நிகழ்ச்சியில் திருவள்ளுவர் அறவழிப் பாலர் பாடசாலையில் நடைபெற்ற போது வாசிக்கப்பட்டது.

## பணிகள் தொடரட்டும்!

மனிதன் ஒரு சமூகப் பிராணிதான். சமூகத்தின் ஒரே நிலையான தன்மையை அவன் ஏற்றுக் கொள்வதில்லை

சமூக வாழ்விலும், தனிப்பட்ட சொந்த வாழ்விலும் மாற்றங்களை விரும்புவது மனித சுபாவம்,

அந்தச் சுபாவத்தின் காரணமாகவே இன்று மனித வாழ்வில் பிரமிக்கத்தக்க மாற்றங்களைக் காண்கின்றோம்,

இந்த மாற்றங்களுக்காக மனிதன் உழைக்கின்றான். அது சிந்தனைப்பாற்பட்டதாகவும் உடல் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். இந்த உழைப்பு சில சமயங்களில் பெரும் போராட்டமாகவும் அமைகின்றது. இந்தப் போராட்டங்களும் கூட எப்பொழுதுமே ஒரே விதமாக அமைந்து விடுவதில்லை. அப்படியான ஒரு போராட்ட வழியே அறவழிப் போராட்டம்.

சமூக அநீதிகளை ஏற்றத்தாழ்வுகளை சுரண்டல் போக்குகளை எதிர்ப்பதற்கு அறவழிப் போராட்டம் ஒரு சிறந்த மார்க்கம். இதனை இவ்வியக்கம் தனக்கே உரிய பாங்கில் செயல் படுத்தி வெற்றி கண்டுள்ளது.

அதன் பணிகள் தொடர்ந்து நீடித்து சமூகத்துக்கும், நாட்டிற்கும் இன்றும் பல நன்மைகளைப் புரிந்திட வேண்டும் என விழைகின்றேன்,

எஸ். பெருமாள்
ஈழநாடு — பதில் ஆசிரியர்
27-0-1 1987

## நற்பணிக்கு வாழ்த்து

சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கத்தின் இலங்கைக் கிளையாக, எம்முடன் இணைந்து இயங்கி வரும்- அறவழிப் போராட்டக் குழு, தனது ஏழாண்டு சேவை நிறைவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில், இக்கிளையின் பணிகளைப் பாராட்டுவதில் நான் பெருமிதமடைகிறேன்.

இலங்கையில் தமிழ் மக்கள் துன்பப்படுகின்ற நிலைமைகளையிட்டு, சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கம் மிகுந்த வேதனையும், துயரமும் கொள்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் மிக விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என நாம் சர்வதேச மட்டத்தில் வலியுறுத்தி வருகின்றோம்.

அறவழி இயக்கம் நீடித்து நிலைத்து- நல்ல பணி செய்ய வாழ்த்துகிறேன்.

டேவிட். மக்றெனேல்ட்
லண்டன் — தலைவர்
சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கம்

## வாழி நீ வாழி!!

அகிலம் எங்கும்
அன்பு பெருக
அறிவு வளர
தர்மம் மலர
தனி வழி நின்று
அறவழி காட்டும்
போராட்டக் குழுவே
நீடித்து நிலைத்து
நீதியை நிறுத்தி
நீசர்களை வென்று
மனித இனத்தை
வாழவைப்பாயே

— சீனச்சானா —
தென்மட்டுவில்


## அறவழி இயக்கம் வாழ்க.

தங்களுக்குத் தேவையான
⚜ கேற் ⚜ கிறில்
⚜ கதிரை ⚜ ரீப்போ.
⚜ மெசின் பெட்டி
⚜ லாண்ட் மாஸ்டர் பெட்டி
இவை யாவும் ஓடருக்குக் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
உரிமையாளர்:
L. இராசரெத்தினம்
நுணுவில் சந்தி
சாவகச்சேரி



## அறவழிக்கு எம் ஆதரவு

உங்களுக்குத் தேவையான
❁ பலசரக்கு வகைகள்
❁ மளிகைச் சாமான்கள்
❁ குறோசரீஸ்
மற்றும் —
உள்ளூர் உற்பத்திப் பொருள் கொள்வனவுக்கும்
விஜயம் செய்யுங்கள்
இராஜேஸ்வரி ஸ்டோர்ஸ்
கூமாங்குளம்
வவுனியா

# ஆசிச் செய்திகள்

## பாராட்டுகிறோம்

அறவழி என்பது உலகில் வாழ்கின்ற சகல மக்களுக்கும் உரித்தானதாகும். சமாதானமான, சுதந்திர, நீதியான ஒரு சமுதாயத்தினைக் கட்டியெழுப்புகின்ற முக்கியமான பணியில் 1979ம் ஆண்டு முதல் ஈடுபட்டுழைத்துவருகின்ற அறவழிப் போராட்டக் குழுவின் பணிகள் பாராட்டப்படத் தக்கவைகளாகும்.

இயக்கத்தின் நற்பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று சமுதாயத்தில் எழக்கூடிய பெரிய பிரச்சனைகளுக்கும் அறவழிரீதியான தீர்வு களைக்காண, இவ்வியக்கத்திற்காக உழைப்பவர்கள் பாடுபடல் வேண்டும் என ஆசீர்வதிக்கின்றோம்.

பிலடெல்பியா ஜோர்ஜ் விலோயி
அமெரிக்கா வில்லியன் விலோயி.

## வாழும் மெழுகுவர்த்திகளே!

''இருளைச் சதா சபித்துக்கொண்டிருப்பதிலும் பார்க்க ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வெளிச்சத்தினை ஏற்படுத்துவது மிகவும் நல்லது'' எனும் பொன்மொழிக்கு இலக்கணமாகச் செயற்பட்டுவருகின்ற சர்வதேச சகோதரத்துவ தோழமை இணக்க இயக்கத்தின் இலங்கைக் கிளையாகிய அறவழிப் போராட்டக் குழுவின் பயனுள்ள பணிகள் அமைந்துவருகின்றன.

இவ் இயக்கத்தில் இருக்கும் சகோதர சகோதரிகளின் தொகைகள் மிக, மிகக் கூடுதலாக இல்லாவிடினும்கூட, கணிசமானவர்கள் இவ்வியக்கத்தின் வழி நின்று, துன்பப்படும் மக்களுக்குக் காத்திரமான பணிகள் செய்வது பாராட்டப்படக்கூடியதாகும்.

போராட்ட காலகட்டத்தில்,வாழந்துகொண்டிருக்கும் மக்கள் மத்தியில், தங்களின் பணிகள் சிறியனவாக இருப்பினும்கூட, அப்பணிகளின் பெறுமதிகள் பலகோடி பெறும்.

இவ்இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவருகின்ற நீங்கள் வாழும் மெழுகுவர்த்திகள். உங்களுடைய பிரகாசமான வெளிச்சம், சர்வதேச மட்டத்தில் மேலும் பிரகாசிக்கவேண்டும் என, ஆயிரமாயிரம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச தோழமை இணக்க இயக்கத்தின் சார்பாக இறைவனை வேண்டுகின்றேன்.

ஜேம்ஸ் எச். பொறஸ்ட்,
நெதர்லாந்து பொதுச்செயலாளர்.
(I. F. O. R.)

## வீரமிக்கமெழுகு வர்த்திகள்

இருளும், அறியாமையும், ஊக்கமின்மையும் நிரம்பிய இவ்வுலகில், அறவழிப் போராட்டக்குழு எனும் சமுதாயப்பணிஸ்தாபனம், வீரமிக்க மெழுகு வர்த்திபோன்று பிரகாசித்துவருகின்றது.

தமிழ் மக்கள் மத்தியிலே அறவழிரீதியில் கடந்த ஏழாண்டு காலமாக நற்பணி புரிந்து வருகின்ற ஸ்தாபனத்தின் சேவையையும், விசுவாசமிக்க பங்களிப்பினையும், நாம் நன்கு அறிவோம்.

சமத்துவத்தையும்—அறவழியையும் மையமாகக் கொண்டு. ஆண்களும் பெண்களும் இணைந்து சமுதாய மாற்றப் பணியில் ஈடுபட்டதனைக் கண்ட காட்சிகளை எண்ணி நாம் இன்றும் பெருமை கொள்கின்றோம்.

சமாதானம் செய்வோர்கள் கொண்ட குடும்பத்தில் வாழ்கின்ற அத்தனை பேரையும் நாம் எம் இதயத்தில் ஏற்றி பூஜிப்போம்.

கலாநிதி திருமதி ஜோனு ஆர். மேஸி,
அமெரிக்கா.

## தொடர்புகள் வளர்க

1980ம் ஆண்டு முதல் அறவழிப் போராட்டக் குழுவுடன் நாம் மேற்கொண்டு வருகின்ற ஆழமான நட்பின் காரணமாக இவ்இயக்கத்தினரின் களங்கமற்ற சேவைகளை நன்கு அறிவோம்.

தங்கள் நாட்டுக்கு நான் இதுவரை வராவிட்டாலும்கூட, தங்கள் மக்கள் இனுபவிக்கின்ற துன்பங்கள், துயரங்கள், வேதனைகள்பற்றி நாம், நன்குஇலகுவில் அறியக்கூடியவாறு எம் தொடர்பு வேரூன்றியுள்ளது.

இங்வகையில், இவ்இயக்கத்தின் பணிகள் வெளித்தொடர்புகள் மேலும் வளரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

சிவியன் புளொம்,
போர் எதிர்ப்பாளர் இய்க்கம்,
நோர்வே.

## இதயம் மகிழ்கிறது

அறவழிப் போராட்டக்குழுவுடன் நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள நட்பினையும். தொடர்பினையும் எண்ணி நாம் மிகவும் பெருமிதமடைகின்றோம்.

ஆசிய—பசிபிக் பிராந்தியத்தில் இயங்குகின்ற இவ்வாறுன அமைப்புகள் மத்தியில் நெருக்கமான உறவுகள் வளர்க்கப்படவேண்டும்.

அறவழியின் நல்ல நல்ல பணிக்கு எம் இதய பூர்வமான பாராட்டுக்கள்.

போர் எதிர்ப்பாளர் சபை,
கன்பேரா
அவுஸ்திரேலியா,

# பெருமைப்படுகிறோம்

அறவழி ரீதியான சமுதாயமாற்றப் பணிகளில் தங்கள் ஸ்தாபனம், மிகுந்த தியாகத்துடன், ஆற்றி வருகின்ற பணிகளையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

அறவழி என்பது ஒரு வாழ்க்கை முறையாகும். இவ்வழி நின்று தங்கள் மக்களுக்குச் செய்கின்ற தொண்டுகளைத் தாங்கள் மென்மேலும் தொடர வேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துகின்றோம்

பீற்றர். டி. யோன்ஸ்
அவுஸ்திரேலியா — அவுஸ்திரேலிய சமாதானக் கமிட்டி

# பணி பெருகட்டும்

அறவழிப் போராட்டக் குழுவின் ஆரம்ப காலப் பணிகளை நான் 1981ம் ஆண்டு காலத்தில் நேரில் பார்வையிட்டேன். சமுதாய மாற்றம் தொடர்பாக, அறவழியைத் தமது கொள்கையாகக் கொண்டு இவ் இயக்க அன்பர்கள் மிக்க விசுவாசத்துடன் பணி செய்து வகின்றார்கள்.

இவ் இயக்கத்தினரின் அறவழிப் பயிற்சி, அறவழி வெளியீட்டுப் பணிகளை நான் மெச்சுபவன்.

அறவழிப் போராட்டக் குழுவின் விசுவாசமிக்க பணிகள் மென் மேலும் பல்கிப் பெருகி- மக்களுக்கு உதவ வேண்டும் என வாழ்த்துகிறேன்'

டேவிட். எச். அல்பேட்
பிலடெல்பியா. — புதிய சமுதாயப் பிரசுரிப்பாளர்

# வளரட்டும் பணி

அறவழிப் போராட்டக் குழுவின் ஏழாவது ஆண்டு சேவை நிறைவுச் செய்தி கேட்டு நாம் அக மகிழ்கின்றோம். தமிழ் மக்கள் மத்தியில் இவ் இயக்கம் ஆற்றிவருகின்ற சேவைகளை இங்கிருந்து எண்ணிப் பார்க்கின்ற போதெல்லாம், எம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஓடுகிறது.

இவ் இயக்கத்தின் அகதிப்பணி- பாலர் பாடசாலைத் திட்டங்கள் மிக, மிகப் பாராட்டப்பட்டு- ஊக்குவிக்கப்பட வேண்டியவைகளாகும்.

1983 ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் தென்னிலங்கையில் பாதிக்கப்பட்டு, வடபகுதிக்கு ஓடிவந்த மக்களை அறவழிப் போராட்டக் குழு அகதி முகாமில் 20 மாத காலமாக பராமரித்தபின் புனர் வாழ்வுப் பணித் திட்டத்தில் ஈடுபடுத்தியதையும் இன்று நினைவு கூர்கின்றோம்.

வளர்க தம் பணிகள்.

மேற்கு ஜேர்மனி. — சௌந்தன் நமசி—

# உள்ளம் மகிழ்கிறது

அண்ணல் காந்தியின் கொள்கைகளைத் தமிழ் மக்கள் மத்தியில் பரப்புவதுடன், நீதியும், சமாதானமும், சுதந்திரமுமிக்க புதியதோர் சமுதாயத்தினை அமைத்திடப் பாடுபட்டு வருகின்ற ''எம்'' அறவழிப் போராட்டக் குழுவின் ஏழு வருட கால சேவைகள் நிறைவை நினைத்திடும் போது என் உள்ளம் இரட்டிப்பு மகிழ்வு கொள்கிறது.

இவ் இயக்கத்தின் ஆரம்பகாலத் தொண்டனாகவிருக்கும் எனக்கு, இவ் இயக்கம் இன்று ஆற்றி வருகின்ற சேவைகளை அடிக்கடி அறிந்து- உண்மையில் மகிழ்ச்சியடைந்து வருகிறேன்'

அறவழிப் போராட்டக்குழு இனி வரும் காலங்களிலும் நல்ல பயனுள்ள ப ணிகளை ஆரோக்கியமாகச் செய்திட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இவ் இயக்கத்தின் இயக்குனர்கள் தொண்டர்களுக்கு என் உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

டென்மார்க். — எம். எம். சண்முகநாதன்

# வரலாற்றுப்பணி வளர்க

அறவழி இயக்கத்தின் ஏழாண்டு சேவை பூர்த்தி குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

தமிழ் மக்கள் மத்தியில் இவ் இயக்கத்தினர், இன்று ஆற்றிவருகின்ற பெறுமதியான சேவைகளில் நாம் அனைவருமே பெருமைப்படுகிறோம்.

இவ் இயக்கத்தினரால் 1983ம் ஆண்டின் அகதிகளுக்கு ஆற்றப்பட்ட சேவைகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையாகும்.

அத்துடன், கிராமியப் பணிகளிலும் இவர்கள் காட்டிவருகின்ற ஆர்வத்தினையும் நாம் மனதாரப் பாராட்டி, இயக்கம் தொடர்ந்து வளரப் பிரார்த்திக்கின்றோம்.

— நந்தன்
பாரீஸ் — சுபாஸ்கரன்
பிரான்ஸ். — பகீரதன்
— யோகானந்தன்

நம்மை நாமே தாழ்வாகக் கருதும் மனப்பான்மை நம்மிடம் தடித்திருக்கிறது. அதனாலேயே நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். மனித சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் என்பதே கூடாது. சமதர்மத்தையும், சுதந்திரத்தையும் நிலைநிறுத் நாம் பாடுபட்டு வருகிறோம் எல்லோரும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். நம்பிக்கையுடன் வாழவேண்டும்.

—நேரு—

அறவழி இயக்கப் பணி சிறக்கட்டும்!

உள்ளூர் உற்பத்திக்கு
ஊக்கம் கொடுப்பீர்!

வாழ்த்துவோர்!

## ஸ்ரீ துர்க்கா
## மின் தறி ஆலை
## சக்தி காமென்ஸ்
## சிலோன் கான்லூம்
## ரெக்ஸ்ரைல்ஸ்

டச்சு வீதி
சாவகச்சேரி.

உரிமையாளர்:- திரு. எஸ். நவரெத்தினம்.

அறம் வெல்க

அறவழி வாழ்க! வளர்க!

- தரமான தமிழ், ஆங்கில அச்சு வேலைகளுக்கும்-
- பாடசாலை, காரியாலய உபகரணங்களுக்கும்-
- அழகு சாதனப் பொருட்களுக்கும்-
- இந்திய தமிழ் சஞ்சிகைகளுக்கும்-

விஜயம் செய்யுங்கள்

## திருக்கணிதம்

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

அறவழியை வாழ்த்துகிறோம்

உங்களுக்கு வேண்டிய:-

- ★ அலங்காரப் பொருட்கள்
- ★ பாதணிகள்
- ★ விளையாட்டுப் பொருட்கள்
- ★ அழகு சாதனப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் வாங்க நாடுவீர்!

நட்சத்திரம்

நவீனசந்தை உட்புறம்
சாவகச்சேரி.

அறவழிப் போராட்டக் குழுவின் பணிக்கு

எமது வாழ்த்துக்கள்

- றபர் ஸ்டாம்பு.
- புளொக்.
- ஸ்ரிக்கர்ஸ்.
- பெயர்ப் பலகைகள்

போன்றவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## SUN FRAANK INC

KACHCHAI ROAD,
CHAVAKACHCHERI.

அறவழிப் போராட்டக் குழுவின்
ஏழாவது ஆண்டு சேவைக்கு
எமது வாழ்த்துக்கள்.

போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும், தமிழ்- ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், தமிழ்- ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்பு வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டியவர்கள்

விக்ரர் போட்டோஸ்ரற்

இல 9, நவீன சந்தை மேல்மாடி
சாவகச்சேரி.

உரிமை:. வ. சிவராசா
உத்தரவு பெற்ற நில அளவையாளர்

# அறவழித் தொண்டு செய்ய வாரீர்!

**ஆத்மஜோதி ந. முத்தையா**

உலகில் மனித வாழ்வுக்கு இரு வழிகள் இருக்கின்றன. ஒன்று அறவழி, மற்றது மறவழி. அறவழியிற் செல்வதே பகுத்தறிவுடைய மனிதனின் கடமையாகும். இதனை மணிவாசகர் ஆமாறு என்றும் சாமாறு என்றும் குறிப்பிடுவார். ஆமாறு என்பது ஆகும் வழி; சாமாறு என்பது சாகும் வழி. ஆகும் வழி வடக்கு நோக்கிச் செல்வது; சாகும் வழி தெற்கு நோக்கிச் செல்வது. வடக்கே சிவபெருமான் வீற்றிருக்கின்றார்; தெற்கே இயமன் இருக்கின்றான். சிவனை நோக்கிச் சென்றால் கிடைப்பது சரணம். இயமனை நோக்கிச் சென்றால் கிடைப்பது மரணம்.

நாம் அதிக நேரம் தெற்கே நோக்கிப் பிரயாணம் புரிகின்றோம். சில விநாடி நேரம், அதுவும் கூட சரியில்லாமல் வடக்கு நோக்கிப் பிரயாணம் புரிகின்றோம். சிவத்தைப் பேணித் தவத்தைச் செய்வது ஆகும் வழி; அவநெறி சென்று வெறும் பொழுது போக்குவது வாகும் வழி.

நாம் எல்லோரும் நலமாகத்தான் வாழ விரும்புகின்றோம். நலம் வேண்டாம் என்று எவராவது விரும்புவார்களா? எந்த உயிராவது விரும்புமா? எல்லா உயிர்களும் நலத்தையே நாடுகின்றன. கடிதம் எழுதும்போது கூட இவ்விடம் நலம்; அவ்விடம் நலத்திற்கு எழுதவும் என்றுதானே எழுதுகின்றோம். ஆனால் எது, நலம் என்று நாம் நன்கு உணர்கின்றோமில்லை. உண்பது நலம் என்றால் எந்த விலங்குதான் உண்ணாமல் இருக்கின்றது? குழந்தைகளைப் பெறுவதா நலம்? பன்றி நாய், பூனை முதலிய உயிர்கள் நிரம்பக் குட்டிகளை ஈனுகின்றன. ஆகவே உணவு, உறக்கம், குழந்தைகளைப் பெறுவது முதலியவைகளும் நலம் அன்று.

மனிதன் மறக்க வேண்டாத பொருட்கள் இரண்டு. ஒன்று கடவுள்; அடுத்தது தருமம். கடவுள் வேறு தருமம் வேறு அல்ல. கடவுளே தான் தருமம். தருமமே தான் கடவுள். ஆதலால் தான் இந்துக்களாகிய நாம் தருமமாகிய எருதின் மீது கடவுளை ஏற்றிப் பார்க்கின்றோம். ஔவையார் ஆத்திசூடியில் முதன் முதலில் அறஞ் செய விரும்பு'' என்று கூறியமை அதனுடைய மேன்மை கருதியே.

அறமாகிய நல்ல காரியத்தைச் செய்வதைக் காட்டிலும் நல்லது வேறில்லை. அதை மறந்து விடுவதைக் காட்டிலும் கெடுதலும் வேறில்லை. அறம் செய்வதனால் நன்மைகள் உண்டாகும் என்பது சரி. அதைமறந்து விடுவதால் அந்த நன்மைகள் உண்டாவது தானே இல்லாமற் போகும். கேடு எப்படி வரும் என்ற சந்தேகம் உண்டாகலாம். பல நாள் அறம் செய்கிறவனும் கூட ஒரு நாள் அதை மறந்து கடமையிற் தவறுவானாகில் அந்தச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்ற அறவாழ்வின் பகைவர்களாகிய கெட்ட எண்ணங்கள் புகுந்து அதுவரையிலும் அவன் செய்த அறங்களின் பயன்களையும் அழித்து விடக் கூடிய தீய ஒழுக்கத்திற்கு ஆளாகி விடலாம். ஆதலால் அறம் செய்ய முடியாத சமயங்களிலும் அதை மறக்காமல் இருக்க வேண்டும்.

''அறத்தான் வருவதே இன்பம்'' என்பது என்பது வள்ளுவன் வாக்கு. இத்தகைய அறவழிகளை மக்கள் உள்ளத்தில் புகுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கோடு அறவழிப் போராட்டக் குழு ''அறவழி'' என்ற பெயரால் மாத சஞ்சிகை ஒன்றை நடத்தி வருவது யாவரும் அறிந்த ஒன்றாகும். இம் மாத வெளியீட்டில் அறவழியைத் தவிர வேறு எத்தகைய கருத்துக்களையும் நாம் காண முடியாது. இக்காலம் வெளியாகும் பத்திரிகைளில் குடும்பமாக வாசிக்கக் கூடிய பத்திரிகைகள் கிடையாது என்று குறைப்படுவோர் உண்டு. அத்தகைய குறையைப் போக்கி வெளிவருவது அறவழி என்றால் அது மிகையாகாது.

குழந்தை உள்ளங்களிலே நல்ல கருத்துக்களைப் பதியச் செய்தால் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வாழ்வார்கள். இக் கருத்தை மையமாகக் கொண்டு அறவழிப் போராட்டக் குழு கிராமந் தோறும் பாலர் பாடசாலைகளை உருவாக்கி நடத்தி வருகின்றது. வெளிநாட்டிலுள்ள சில நிறுவனங்களுடைய உதவியோடு இப் பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இன்று நாற்பதுக்கு மேற்பட்ட பாலர் பாடசாலைகளை நடாத்தும் தகுதியினை அறவழிப் போராட்டக் குழு பெற்றிருக்கிறது. என்பதனை நாம் கருத்திற் கொள்ளும் போது அதன் துரித முன்னேற்றத்தை உணரக்கூடியதாக இருக்கின்றது. கிராமப் பகுதிக் குழந்தைகளுக்கும் நகரப்பகுதிக் குழந்தைகளுக்குக் கிடைக்கும் வசதிகளைச் செய்து கொடுத்தால் அவர்களுடைய திறமைகளையும் வெளிப்படுத்தலாம் என்பதனைச் சாதனை மூலம் அறவழிப் போராட்டக்குழு செய்து வருகின்றது.

தினமும் நம்மை நோக்கி அகதிகள் வந்து கொண்டே இருக்கின்றார்கள். ஸ்ரீலங்கா அரசின் கொடுமையினால் மக்கள் அகதிகளாக்கப்பட்டு நாலா பக்கங்களிலிருந்தும் வந்துகொண்டே இருக்கின்றார்கள். இத்தகைய அகதிகளுக்கு இருக்க இடமும் உடுக்க உடையும் உண்ண உணவும் கொடுத்து ஆதரித்து வரும் அறவழிப் போராட்டக் குழு மென்மேலும் தமது பணியைத் தொடருவதற்கு பொது நலத் தொண்டர்களும் பொருளுதவியும் நிறையத் தேவை. இத் தொண்டில் பங்கேற்றுக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும்.

# அகதிப் பணியில் அறவழி

- சண் காளிதாஸ் -

*1983* ஆண்டு ஆடிக்கலவரத்தில் உறவினரை, உடைமைகளை இழந்து தென் இலங்கையில் இருந்து யாழ் நோக்கி வந்த ஆயிரமாயிரம் மக்களுடன் நானும் ஒருவனாக கைதடி அகதி முகாம் வந்தடைந்த அன்று தான் அறவழிப் போராட்ட இயக்குனர்களையும், தொண்டர்களையும், ஆதரவாளர்களையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது.

ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஊதியமாகப் பெறும் அரச ஊழியர்கள் பொறுப்பற்ற முறையில் தமது கடமைகளை செய்வதை அன்றாடம் சந்தித்த எனக்கு எதுவித ஊதியமும் இல்லாது சேவை மனப்பான்மையுடன் இரவு பகலாக தொண்டு புரியும் அறவழி தொண்டர்களையும், அவர்களது நிர்வாகத் திறமைகளையும் தெரிந்து கொள்ள முடிந்தது.

அறவழிப் போராட்டக் குழு செயலாளராகிய திரு. க. ஜீவகதாஸ் அவர்களின் சிந்தனா சக்தியின் செயல் பாடுகளால் பணிமனை, களஞ்சியம், உணவு கூடம், தொழில் கூடம், கல்வியறை, பிரார்த்தனை கூடம், வாசிகசாலை, ஒன்று கூடல், விளையாட்டு திடல் என்று நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே சென்றது

ஆயிரத்து அறுநூறுக்கும் அதிகப்பட்ட மக்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்து பராமரிப்பது என்பது நேரடி அனுபவமுடையவர்களால் மட்டுமே உணரக் கூடிய ஒன்றாகும்.

கைதடி அகதிகள் ஆதரவு முகாமில் இருந்தவர்களில், குடா நாட்டில் எதுவித தொடர்புமில்லாத யாழ்ப்பாண தமிழர் இருந்தனர். கொழும்பில் இருந்து வந்த தனவந்த தமிழர் இருந்தனர். மலையகத்தில் இருந்து வந்த தொழிலாள தமிழர் இருந்தனர். அனுராதபுரத்தில் இருந்து வந்த கிராமியத் தமிழர் இருந்தனர். தமிழரை மணந்த சிங்களவர், பறங்கியர் போன்றோரும் இருந்தனர்.

தொழில் ரீதியாகப் பார்க்கும் பொழுது டாக்டர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள் பல்வேறு பட்ட அரச உத்தியோகத்தர்கள், நகர சுத்திகரிப்பாளர் இருந்தனர்.

படாடோப மாளிகையில் வாழ்ந்தவர்கள், பட்டி தொட்டிகளில் வாழ்ந்தவர்கள், நடுத்தர வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இருந்தனர்.

இப்படியாக வெவ்வேறு விதமான வாழ்க்கை முறைகளில் அனுபவப்பட்ட அனைத்து மக்களையும் ஒரு தாய் மக்களாக, ஒருபானை சோற்றை பகிர்ந்துண்பவர்களாக வைத்திருந்த பெருமையும் அறவழிப் போராட்டக் குழுவினருக்கு கிடைத்த மிகப் பெறுமதியான பதக்கமாகும்.

ஒருகுடையின் கீழ் வாழ்ந்த மக்களிடையே சிற்சில வேளைகளில் சிறு சிறு தகராறுகள் ஏற்படும் போதெல்லாம் அவர்களது தாயாய் தந்தையாய், சகாவாய், சகோதரனாய், பிள்ளையாய் இருந்து அன்பு காட்டி ஆதரித்த முகாமையாளராகிய திரு. வி. க. துரைராசா அவர்களை எந்த நெஞ்சம் தான் மறக்கும்.

பெருந்தொகையான மக்களை எத்தனை மாதங்களுக்குத் தான் உணவு, உடை கொடுத்து பராமரிப்பது. அப்படி பராமரித்தாலும் கூட அவர்களது மனோநிலை, எதிர்காலம் பாதித்து விடுமே என்று அறவழிப் போராட்டக் குழுவினர் சிந்தித்தனர்.

அப்பொழுது திரு. க. ஜீவகதாஸ் அவர்கள் சமயோசிதமாக எடுத்த முடிவு தான் ''அகதிகளின் கைப்பணி பொருட்காட்சி''யாகும்.

பொருட்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. அகதிகளின் திறமைகள் வெளிக்கொணரப்பட்டன. தெரிந்தவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். தெரியாதவர்கள் கற்றுக் கொண்டார்கள்

அப்பளம், பற்பொடி, பனம் பொருள், ஆடைகள், தின்பண்டங்கள், இப்படி எத்தனை எத்தனையோ விதமான பொருட்கள் தயாரிக்கப்பட்டு ஊக்குவிப்பு அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன.

பொருட் காட்சிக்கு வந்தோர் பொருட்களை மட்டுமா வாங்கினர். பொருட்களை தயாரித்தவர்களை தமதாக்கிக் கொள்ள விரும்பினர். சிலருக்கு தொழில் வாய்ப்பு கிட்டியது. நோர்வே தொண்டர் ஸ்தாபனம் மூன்று லட்சம் ரூபாய்களை தொழில் பேட்டை அமைப்பதற்கென வழங்கியது. சில உள்ளூர் நிறுவனங்கள் காணி வழங்கவும் இன்னோரன்ன உதவிகளை வழங்கவும் முன்வந்தன.

யாழ் நோக்கி வந்தவர்களை யாழ்ப்பாணத்திலேயே குடியேற்றுவது என முடிவு செய்யப்பட்டது. கிடைக்கக் கூடிய காணிகளில் நீர், நிலம் பரிசோதிக்கப்பட்டது. சாவகச்சேரி தொகுதியில் மறவன்புலோ எனும் கிராமத்திலும் கெற்பேலி எனும் கிராமத்திலுமாக இரண்டு வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு இடங்களுமே சிறந்த குடிநீரை உடைய கிராமங்களாகும். அரச உதவியுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் நிர்மாணப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. குடும்பங்களுக்கு பங்கீடு செய்யப்பட்ட காணிகளில் பயன் தரும் மரம் செடிகள் வளர்கின்றன. எதிர்காலத்தில் இரண்டு கொழும்பு கிராமங்கள் சாவகச்சேரி தொகுதயில் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இத்துடன் அறவழிப் போராட்டக்குழுவினரின் சேவைகள் முடிவடைந்து விடவில்லை. வவுனியா, திருமலை, மன்னார், கிளிநோச்சி என நாளாந்தம் அரச படைகளின் காடைத்தனத்தில் இருந்து தப்பி வந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கான சேவைகள் நீண்டு கொண்டே போகின்றன.

# தமிழ் அன்னை பெருமிதம்

—தர்மினி

அறவழிப் போராட்டக் குழுவின் ஏழாவது ஆண்டு மலருக்கு என்னைக் கருவினை தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன் சமுதாய வளர்ச்சிக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் ஒரு திறவுகோல்தான் அறவழி:

இருட்டினில் வாழும் உயிர்களுக்கு அறவழி ஒளி விளக்காகும். இருள் சூழ்ந்திருந்த பல கிராமங்கள் இன்று ஒளிபெற்று விறுநடை போடுகின்றன. சமூகத்திலே உள்ள குறைபாடுகளை நீக்கி மக்களிடையே விழிப்புணர்ச்சியையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்திய அறவழி வாழ்க! வளர்க!

இவ்வியக்கம் கடந்த ஏழு ஆண்டுகளாக ஆற்றிவரும் சேவைகளை பாராட்டி தமிழீழ அன்னை பெரும் மகிழ்ச்சியடைகிறாள். அரசியல் மோதல்கள் அநீதிகள் இனப்புறக் கணிப்புகள் வகுப்பு வேற்றுமைகள் சாதிப் பாகுபாடுகள் அத்தனையும் மலிந்து கிடக்கும் இந்த நூற்றாண்டில் அறியாமையை நீக்கவும் தன்மான உணர்ச்சியை உண்டாக்கவும் தமிழீழத்தில் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற உண்மையை உறுதிப்படுத்தவும் அறவழி முன் நின்றமையை யாவரும் ஏற்றுள்ளார்கள்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டு உரிமைகள் இழந்து வாழ்கின்ற மக்களுக்கு விடிவிளக்கும் இதுபோன்ற சமூக நிறுவனங்களுக்கு முன் மாதிரியாகவும் சேவை புரியும் அறவழி—கிராமங்களின் பாலர்களின் மறைந்திருக்கும் அகஇருளை நீக்கி அறிவை வளர்க்க அரும்பாடுபட்டு உழைத்தமையை எண்ணிப் பார்க்கிறேன்.

சிரமதானப் பணிகளிலும் முதலுதவிச் சேவைகளிலும் முன்வந்து மக்களின் நம்பிக்கை பெற்ற அறவழியின் செயற்பாட்டை நினைத்துப் பார்க்கிறேன்.

அறவழியின் அறிவு வளர்ந்து வரும் இளம் சந்ததியினரின் புதிய சிந்தனைகளை செறிவுடன் கையாண்டு மேலும் பல ஆக்கபூர்வமான அரும்பணிகளை தமிழ் மக்களுக்கு செய்யும் என்ற எண்ணத்துடன் பட்டம் பதவிக்கோ சுயநலமின்றி சேவை மனப்பான்மையோடு செயலாற்றும் சகோதரர்கள் யாபேருமே தமிழீழ மக்களின் பாராட்டுக்குரியவர்களாகின்றனர்.

---

## சாதனை செய்வீர்

சமுதாய மாற்றப்பணியில் ஏழாண்டுகளை நிறைவு செய்துள்ள அறவழிப் போராட்டக்குழுவின் அரிய பணிகளை நாம் பெருமையுடன் பாராட்டுகின்றோம்.

நெருக்கடிமிக்க காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ்மக்களின் பிரச்சனைகள், முரண்பாடுகள் மிக விரைவில் தீர்ந்து மக்கள் சமாதானமான வாழ்வினை முன்னெடுக்க, இவ்இயக்கத்தின் பணிகள் உதவவேண்டும்.

எதிர்காலத்தில் அறவழிப் போராட்டக்குழு மேலும் பல வெற்றிகளையும் சாதனைகளையும் நிலைநாட்டப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ். ராதா கிருஷ்ஸ்ணன்,
பொதுச்செயலாளர்,
காந்தி சமாதான நிலையம்.
புதுடில்லி
இந்தியா.

## தமிழ் அகதிகளை வெளியேற்றுவதை சுவிஸ் அரசு பின்போட்டுள்ளது

சுவிஸிலுள்ள இதங்கைத்தமிழ் அகதிகளை அங்கிருந்து வெளியேற்றி மீண்டும் இலங்கைக்கு அனுப்பும் முயற்சியினை அந்நாட்டு அரசு திடீரெனப் பின்போட்டுள்ளது.

சுவிஸ் அரசு மேற்கொண்டிருந்த இந்த வெளியேற்று நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலும் மனித உரிமைகள், அறவழி அமைப்புகள், திருச்சபை இயக்கங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிப்பிரிவு ஆகியன பலத்த கண்டனக் குரல்களை எழுப்பின.

சுவீஸில் தற்போது அரசியல் தஞ்சம் கோரி 4500 இலங்கைத் தமிழர்கள் இருக்கின்றனர். இவர்களுள் 140 பேருக்கு மட்டுமே அந்நாட்டு அரசு தஞ்சம் வழங்கியுள்ளதாக அறியப் படுகின்றது,

# ஒளி விளக்கு

— அதிபர் நா. கந்தையா

அறவழிப் போராட்டக் குழு தனது ஏழாவது ஆண்டை எழுபது ஆண்டு செயற்பாடு மிக்க சேவைகள் செய்து பூர்த்தியாவதை கண்டு எம் எல்லோர் மனமும் பூரிப்படைகிறது. இத்தாபனம் தொடங்கி ஏழு ஆண்டுகளா? எம்மால் நம்பமுடியவில்லை! அவ்வளவுக்கு இதன் சேவைகளை நாம் கண்நோக்கும் போது இவ்வியக்கம் பல ஆண்டுகளுக்கு முன் தோன்றியதுபோன்று எம் எல்லோருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

பல ஸ்தாபனங்களை பெயருக்காக தொடங்கி அதன் பெயரில் ஓரிரு செயல்பாடுகளை ஏனோ தானோவென சிரமப்பட்டு செய்வதைப் பார்க்கும்போது, அறவழிப் போராட்டக் குழு மிக இதய சுத்தியோடு எந்த இக்கட்டான நேரத்திலும் வேண்டிய நேரத்தில் வேண்டிய மக்களுக்கு தன்னாலான சேவையைச் செய்து தமிழ் மக்கள் மனதில் ஒரு ஒளி விளக்காக திகழ்கின்றது.

ஆரம்ப காலத்தில் அறவழிப் போராட்டக் குழு தொடங்கு முன் அதன் தாபகர்கள் இங்குள்ள சாதி ஒடுக்குமுறை சீதனக் கொடுமை போன்ற சமூக விரோதச்செயல்களைக் கண்டு கொதித்தெழுந்து, அச்செயல்களைக்கண்டித்து, சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற பல போராட்டங்களை நடத்தினார்கள். இச்செயல்பாடுகளுக்கு ஒரு புனிதமான ஸ்தாபனம் வேண்டும் என அவர்கள் மனதில் உதிக்கவே அறவழிப் போராட்டக் குழு என்னும் ஸ்தாபனத்தை தொடங்கினார்கள்.

இத்தாபனத்தின் ஸ்தாபகர் திரு. க. சச்சிதானந்தன். பேராசிரியர் கு. நேசையா, அமரர் சி. கதிரவேற்பிள்ளை, வி. என். நவரத்தினம் போன்றவர்களையும் நான் எண்ணிப்பார்க்கிறேன்.

இத்தாபனம் சாதி ஒடுக்குமுறை சீதனக் கொடுமைகளுக்காக பல போராட்டங்களையும் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை போராட்டங்களை நடத்தியதுமல்லாமல் இங்குள்ள ஆலயக்கதவுகள் அனைத்து மக்களுக்கும் திறந்துவிட பல மனக்கதவுகளையும் திறக்கச் செய்தது.

அத்துடன் 1983ம் ஆண்டு கலவரத்தின்போது பாதிக்கப்பட்டு தென்னிலங்கையில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான அகதிகளைக் காக்க அவர்களுக்கு மறவன்புலவிலும் கெற்பேலியிலும் புனர்வாழ்வளிக்க வழி வகுத்தமையை மக்கள் என்றென்றும் பாராட்டுவர்.

இதன்பின் 1986ம் ஆண்டில் திருகோணமலையில் இருந்துவந்த தமிழ் அகதிகளை அனுசரித்து, ஆதரவளித்து வருவதை இன்றும் நாம் கண்கூடாக காண்கின்றோம்.

இவைகளுக்கு மேலாக ஒரு நாட்டின் குழந்தைச் செல்வங்களே எதிர்கால மன்னர்கள், அவர்களை நன்கு பராமரிக்க வேண்டும் என்ற நோக்கில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பின்தங்கிய கிராமங்களில் அறவழிப் போராட்டக்குழு பல சிறுவர் பாடசாலைகளைத் தொடக்கி நடத்தி வருவதுமட்டுமல்லாது, அக்கிராமங்களின் மேம்பாட்டுக்காக உழைத்து வருவது எல்லாவற்றிலும் மேலான சேவை என்றே கூறவேண்டும்.

இதன் தொடக்க காலம்தொட்டு இற்றைவரை இத்தாபனம் வளர்பிறைபோல் வளர்ந்துகொண்டு வருகின்றதைப் பார்க்கும்போது எம்மனம் பூரிக்கின்றது. அரசியல் சூறுவழிகளும். பூசல்களும், சமூக, குடும்ப சுமைகளும் இத்தாபனத்தின் சில உறுப்பினர்களை இடைக்கிடை கலக்கமடையச்செய்தாலும், அவர்கள் உறுதியுடனும், உற்சாகத்துடனும் இத்தாபனத்தை வளர்க்க இறைவன் தொடர்ந்து அருள்பாலிக்கின்றார். யாழ் குடாநாட்டின் ஒரு சிறு பகுதியில் தொடங்கிய இத்தாபனம் இன்று சர்வதேசரீதியில் பிரபல்யம் அடைந்து பெரிய விருட்சமாக விசாலித்து வருவதைக் காணும்போது நாமெல்லோரும் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

இதுவரை இத்தாபனத்தைப்பற்றிக்கூறியும், இதன் தலைவர் திரு. வி. எஸ் துரைராசா, செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் மற்றும் இயக்குனர்கள் இ. பேரம்பலம், எஸ். தங்கராசா, வீ. ஜி. தங்கவேல் போன்றவர்களின் சேவையையும் நாம் நினைவு கூரவேண்டியதவசியம். (18ம் பக்கம் பார்க்க)

## உதவி

கைதடியில்இடம்பெற்ற வெடிகுண்டு விபத்து காரணமாகப் பாதிப்படைந்திருக்கும் 70 குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் (TRRO) தாராள உதவியுடன், அறவழிப் போராட்டக்குழு (NVDAG) இருவார காலத்துக்கான உணவுப் பொருட்களை இம்மாதம் 20ம் திகதி கைதடி வடக்கு சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கியது.

# சொல்லும் செயலும் ஒன்றாக

# செயற்படும் அ. போ. குழு

அணு ஆயுதப்போட்டிகளும். வன்முறைகளும் அதிகரித்துவரும் உலகில் சாந்தி சமாதானம் நிலவச் செய்வதற்காக ஆங்காங்கே பல இயக்கங்கள் தோன்றி பணியாற்றி வருகின்றன. ஆனால் இவற்றைவிட ஒருபடி முன்னேறி தமிழ்மக்களிடையே காந்திய சிந்தனைகளையும், சகோதரத்துவ உணர்வுகளையும், சமாதான எண்ணங்களையும் ஏற்படுத்தும் வகையில் அறவழிப்போராட்டக்குழு பணியாற்றி வருகிறது.

அறவழி வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் மகாத்மா காந்தி. காந்தியின் கொள்கையில் ஊறியவர்களாக இன்றும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அறவழித் தொண்டர்கள்.

ஈழத்தமிழரின் அரசியல் போராட்டம் அகிம்சை வழியில் நடந்துகொண்டிருந்த வேளையில், கடந்த ஏழாண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த அறவழிப் போராட்டக்குழு.

இந்த ஏழாண்டு காலத்தில் அதன்வளர்ச்சி எண்ணற்ற கட்டங்களைத் தாண்டியுள்ளது என்றே சொல்லவேண்டும்.

தமிழருக்கே சாபக்கேடாக அமைந்துள்ள சாதிப்பிரச்சனை, சீதனப்பிரச்சனைகளை களைவதற்காக அறவழிப் போராட்டக்குழு அரும்பணியாற்றி வந்துள்ளது என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

சொல்லும். செயலும் ஒன்றாகச் செயற்பட்டு வரும் அறவழிப் போராட்டக்குழு சாதிப்பிரச்சனையைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக சாதி ஒழிப்பு சம்பந்தமான சுலோகங்களை கோஷித்தும், சுவரொட்டிகளை ஒட்டியும் யாழ்ப்பாணத்தில் பெரும் விழிப்புணர்வை உண்டாக்கியுள்ளமை பாராட்டப்படவேண்டியதாகும்.

உண்ணாவிரதமும். அமைதியான ஊர்வலமும், மௌன விரதமும் இந்த நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்தன.

அத்துடன் பல கலப்புத் திருமணங்களையும் சீர்திருத்த திருமணங்களையும் இந்த அறவழிப் போராட்டக்குழு நடத்தியுள்ளமை பிற முற்போக்கு அமைப்புக்களுக்கு முன்மாதிரியானது என்று கருதவேண்டும்.

எனக்கு இப்பொழுதும் நினைவிருக்கிறது; கடந்த ஏழாண்டுகளுக்கு 'முன் கைதடி சைவ அனாதைகள் இல்லத்தில் அறவழிப் போராட்டக்குழு ஆரம்பமான வேளையில் விரிவுரையாளர் சச்சிதானந்தம் அவர்களால் பயிற்சிவகுப்புக நடத்தப்பட்டுக்கொண்டிருந்தன, அப்பொழுது ''நாங்கள் சீதனம் வேண்டித் திருமணம் செய்யமாட்டோம்'' என பல இளைஞர்கள் சத்தியப் பிரமாணம் எடுத்தனர். இச்செயல் அறவழிப் போராட்டக்குழுவின் ஆரம்பகாலப்பணிகளுள் ஒன்றாகும்.

**என். கே. துரைசிங்கம்**

அன்று சீதனத்தை எதிர்த்து கிழந்தெழுந்த இளைஞர்கள் இன்றும் இந்த குழுவுடன் இணைந்திருந்தால் ஓரளவுக்கேனும் சீதனப் பிரச்சனை தீர்ந்திருக்கும்.

ஆனால் நாட்டிலேற்பட்ட சீரற்ற நிலையில் அந்த இளைஞர்களும் வேறு வேறு திசைகளில் தங்கள் பயணத்தை தொடர்ந்துள்ளனர்.

நல்ல உள்ளமும் பரந்த மனப்பான்மையும் கொண்ட திரு. வி. எஸ். துரைராஜாவும் சிறந்த நிர்வாகத்திறன் கொண்ட க. ஜீவகதாசும் இவர்களுடன் சேர்ந்த சில தொண்டர்களும் அறவழிக்கொள்கையிலிருந்து விலகாது பணிகளைத தொடர்ந்துகொண்டிருக்கின்றனர்.

சமூக சேவையில் முன்னணியினுள்ள அறவழிம்போராட்டக்குழு நாட்டில் நடந்த இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு உடமைகளையும் உறைவிடத்தையும் இழந்து தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மக்கள் பலரை அணைத்து இன்முகத்துடன் வரவேற்று அவர்கள் தங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் செய்துள்ளது. அறவழிப் போராட்டக்குழுவின் நிழலில் அகதியாக வந்து அரும்பசி தீர்த்தவர்கள் பலர்.

1983ம் ஆண்டு அகதியாக வந்தவர்களை பராமரிக்கும் பணியில் ஈடுபட்ட அறவழிப்

(13ம் பக்கம் பார்க்க)

# அறவழிப்பாடசாலை பற்றி மக்கள் கருத்து

அறவழிப் போராட்டக் குழுவினல் நடாத்தப்பட்ட பாலர் பாடசாலைத்திட்டத்தில் சமரபாகு வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்பட்டபின் பிள்ளைகளின் கல்வி போசாக்கு வளர்ச்சிகண்டு மிகவும் சந்தோஷப்படுகின்றேன்.

கி. திருநாமம், வல்வெட்டித்துறை.

அறவழிப் போராட்டக் குழுவின் பார்வையில் இருக்கும் பாலர் பாடசாலையில் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி கூடியதோடு பெற்றோரின் கூடிய கவனம் புலப்படுகின்றது.

பி. ஏ. சரோஜினி தேவி,
மட்டுவில் வடக்கு.

## சொல்லும் செயலும் ஒன்றாக...

போராட்டக்குழு பலரின் சந்தேகப் பார்வைக்குள்ளானது.

நூற்றுக்கணக்கான மக்களை அதுவும் பல இடங்களிலிருந்து வந்தவர்களை பராமரிப்பது என்பது மிகவும் சுலபமான வேலையல்ல. மிகவும் பொறுப்பான பிரச்சனைகட்கு முகம் கொடுக்கும் இந்த பராமரிப்பு பணியை எவ்வித ஊழலும் அற்றவகையில் அறவழிப்போராட்டக்குழு நடத்தியது.

இந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் நோக்கி தினமும் அகதிகள் வருவதை பயன்படுத்தி அகதிமுகாம் அமைத்து அதனல் அந்தஸ்து தேடியவர்களும், அகதிகளுக்கு வரும் பொருட்களை சூறையாடியவர்களும் பலர்.

இத்தகையோர் நடத்திய அகதிமுகாம் இடைநடுவிலே நிறுத்தப்பட்டு அங்கிருந்த மக்கள் நடுத்தெருவில் விடப்பட்டு இறுதியில் அறவழிப்போராட்டக்குழு முகாமில் தஞ்சமடைந்த சம்பவங்கள் சில நினைவில் நிழலாடுகின்றன.

இவ்வாறு இரண்டு வருடங்கள் நடத்தப்பட்ட இந்த அகதிமுகாமில் இருந்தவர்களுக்கு இருப்பதற்கு வீடும், வாழ்வதற்கு வேலையும் கிடைக்க அறவழிப் போராட்டக்குழு பல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

மறவன்புலோ, கெற்பேலி போன்ற குடியேற்றத்திட்டங்களில் வாழும் மக்கள் இதற்கு உதாரணமாக திகழ்கிறார்கள்.

அகதிகளுக்கு உதவியதோடு மாத்திரம் நில்லாது கஷ்டப்பட்ட கிராமங்களில் வதியும் சிறுவர்களுக்கு கல்வியைப் போதிக்கும் பணியிலும் அறவழிப் போராட்டக்குழு இப்பொழுது ஈடுபட்டு வருகிறது.

பல கிராமங்கள் இன்று அறவழிக்கிராமங்களாக மாறும் நிலையையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

அறவழிப் பாலர் பாடசாலை அமைக்கப்பட்டபின் எமது கிராமப்பிள்ளைகள் கல்வி, கலாச்சார நிகழ்ச்சிகளிலும் ஒழுக்கத்திலும் முன்னேறி உள்ளார்கள்.

சி. சிறிஸ்கந்தராசா,
அல்வாய் வடக்கு.

அறவழிப் போராட்டக்குழுவினல் பாலர் பாடசாலை அமைக்கப்பட்டதன் காரணமாக பின்தங்கிய கிராமம் இப்போது அறவழிப் பார்வையில் முன்னேறி உள்ளது.

ஜெபம் இராசமணி,
கொற்றாவத்தை.

அறவழிப் பார்வையில் சமரபாகு அறவழிப்பாலர் பாடசாலை அபிவிருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

திருமதி எஸ். சிவராசா, சமரபாகு.

அறவழிப் போராட்டக்குழுவின் பாலர் பாடசாலைத்திட்டம் கைதடி நவபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டபின் பெற்றோர்களிடையே குழந்தைகளின் கல்வியின் எதிர்காலம் பற்றி புது நம்பிக்கை பிறந்துள்ளது.

த, கார்த்தீபன், நவபுரம்.

அறவழி போராட்டக் குழுவின் பாலர் பாடசாலைத்திட்டம் நாவற்குழியில் உள்ள செல்வ நகரில் ஆரம்பிக்கப்பட்டபின் பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்பில் அக்கறை உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அத்துடன் வசதியில்லாத குழந்தைகளும் ஆரம்பக் கல்வியைக் கற்று வளர்ச்சியடைகின்றனர்.

யோகேஸ்வரன்—ஜெனிதா,
செல்வநகர்.

அறவழி போராட்டக்குழுவின் பாலர் பாடசாலைத்திட்டம் கைதடி மத்தியில் ஆரம்பிக்கப்பட்டபின் சிறார்களிடம் கல்விக்கூடம் சென்று கல்வி கற்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தமை, பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளினல் உந்தப்பட்டமை பாராட்டுக்குரியது

க. கிருபேஸ்வரன், கைதடி மத்தி.

அறவழி போராட்டக்குழுவின் பாலர் பாடசாலைத்திட்டம் மட்டுவில் தெற்கில் ஆரம்பிக்கப்பட்டபின் கிராமத்தில் அமைந்துள்ள பெரும்பாலான பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுகின்றார்கள். பெற்றோரும் ஊக்கமளிக்கின்றார்கள்.

க. சுவர்ண, சோமாஸ்கந்தா.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்ற திட்டத்தின் அறவழி போராட்ட குழுவின் பாலர் கல்வித்திட்டம் பாலர்களின் உள, உடல் வளர்ச்சிக்கு சிறப்பு பணியாற்றுகின்றது.

திரு. ச. செல்வச்சந்திரன்,
ப. ம. திட்டம், மிருசுவில்

அறவழிக் குழுவின்
சேவையை வாழ்த்துகிறோம்

எம்மிடம் ;-

- ஆங்கில மருந்துவகைகள்
- பாடசாலே உபகரணங்கள்
- புகைப்படச் சுருள்கள்
- பால்மா வகைகள்
- புதினப் பத்திரிகைகள்

மற்றும் உங்களின் தேவைக்கு
நாடுங்கள்

அம்பாள் பார்மசி

இல: 1, நவீன சந்தை
சாவகச்சேரி

அறவழிப் போராட்டக் குழுவின்
பணி ஓங்கி வளர்க

உங்களுக்குத் தேவையான ஆடம்பரப் பொருட்கள். அலங்காரப் பொருட்கள், கைக்கடிகாரங்கள், விளையாட்டுப் பொருட்கள், பாதணிகள் வாங்க விஜயம் செய்யுங்கள்

விமலாஸ்

9-15 நவீன சந்தை
சாவகச்சேரி.

அறவழியின் சேவையைப்
பராட்டுகிறோம்

எம்மிடம் உங்களுக்கு வேண்டிய —

- ★ பலசரக்கு வகை.
- ★ பாத்திரங்கள்
- ★ அலங்காரப் பொருட்கள்
- ★ உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்

மலிவு விலேயில் பெற்றுக் கொள்ளலாம்.

மணியம் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, சாவகச்சேரி.

அறவழி இயக்கத்தின் சேவை
வளரட்டும்!

புகைப்படக்கலேயில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களின் சிறந்த சேவையைப் பெற நீங்கள் நாடவேண்டியது!

ஜீவன் போட்டோ

பிரதான வீதி சாவகச்சேரி

அறவழிக்கு எம் வாழ்த்துக்கள்

சிறந்த தரமான போட்டோஸ்ரட் பிரதிகள் எடுக்கவும் —
தமிழ் - ஆங்கில - தட்டச்சு, மொழிபெயர்ப்பு வேலேகளுக்கும் —
உங்கள் நினைவில் இருக்கவேண்டிய ஸ்தாபனம்

அபிராமி

விளம்பர முகவர்
இல.6 நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி.

அறவழி வாழ்க!

- O சகல விதமான ஜவுளி வகைகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும் — நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஸ்தாபனம்!
- O ஆடை உலகில் முன்னேடி!

சிசன்ஸ்

11, நவீன சந்தை, சாவகச்சேரி

# அறவழியின் சேவை அளவிடக்கரியது

பல வழிகளாலும் சிதைந்து சின்னாபின்னமாகி அழிந்தொழிந்து கொண்டிருக்கும் எமது இனத்திற்கு மனந்தளராது தமது சக்திக்கும் வளத்திற்குமேற்ற வகையில் சில அமைப்புக்கள் கோணாத ஊன்றுகோல்களாக நேர் நின்று ஆதரவளித்துவருவது எவராலும் உணரக்கூடியதொன்றாகும். இவ்வமைப்புக்கள் வரிசையில் அறவழிப் போராட்டக் குழுவுக்கு ஒரு முக்கிய இடமுண்டு. சமூக அநீதிகளை அகற்றுவதில் அறவழி நின்று வெற்றி கண்டவர்கள் அறவழிப் போராட்டக் குழுவினர். பல்வேறு சமூக, கல்வி, கலாசாரப் பணிகளில் தம்மை அர்ப்பணிக்கக்கூடிய தெரிந்தெடுத்த இளைஞர்களையும் யுவதிகளையும் பெரியவர்களையும் தொண்டர்களாகக் கொண்ட இத்தாபனம் ஏழு ஆண்டுகள் வெற்றிகரமாகத் தனது சேவையைப் பூர்த்தி செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

எமது சமூகம் பழைய பழக்க வழக்கங்களில் ஊறிப்போனதொன்றாகும். அவற்றிற்கு அடிமையானதும்கூட, இவற்றிலிருந்து விடுபடுவதோ இலகுவானதல்ல, காலவரையறைக்குள் செயல்படுத்தக்கூடியதுமல்ல. தற்போதைய சமுதாய அமைப்பு புரட்சிகர சமூக மாற்றங்களுக்கு வழி வகுக்கும் சுவடிகளைக் கொண்டதல்ல. இதற்கேற்ப அன்புடனும் பண்புடனும் சமூகத்தோடு சமூகமாகக் கலந்துகொள்ளும் அறநெறித் தொண்டர்கள் அறவழியில் நின்று சமூகப் பாகுபாடுகளையும் அநீதிகளையும் அகற்றுவதில் ஆற்றி வரும் பணிக்கு தமிழ் சமுதாயமே கடமைப்பாடுடையது.

1983ம் ஆண்டும் அதனைத்தொடர்ந்தும் ஏற்பட்ட அனர்த்தங்களால் உடைமைகளையும் உறைவிடங்களையும் இழந்து அநாதைகளாக உடுத்த உடையுடன் வடபுலம் நோக்கி வந்தோரை அரவணைத்து அகதிமுகாமமைத்து ஊண் கொடுத்து உடுபுடவை கொடுத்து ஊரெல்லாம் வாழ்த்த உலகெலாம் போற்ற அறவழிக் குழுவினர் ஆற்றிய சேவை அளவிடற்கரியது. தொடர்க அவர்கள் பணி.

நமது நாட்டிலுள்ள வேறெந்தத் தாபனத்தாலும் கவனிக்கப்படாதிருந்த பாலர் கல்வித்துறையைக் கையேற்று மிகவும் பின்தங்கிய கிராமங்களில் பாலர் கல்வி நிலையங்களை ஆரம்பித்து பொருத்தமான ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து இன்று ஏறத்தாழ முப்பத்தைந்து பாடசாலைகளை நிர்வகித்து வரும் அறவழிக் குழுவின் சேவை பாராட்டுதற்குரியதாகும். இப்பாலர் ஆசிரியர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியுமளிக்கப்பட்டு மாதாந்த கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. அண்மையில் நடைபெற்ற தமிழ்ச்சிறுவர் தினம் சகலரது பாராட்டையும் பெற்றது. தமிழ் மண்ணில் பாலர் கல்வியில் இவ்விழா பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளதாக உணரப்படுகின்றது. இத்தாபனத்தை இத்துறையில் மேலும் ஆர்வத்துடன் ஈடுபடச்செய்ய கல்வித்துறையினரும், பொதுமக்களும், பொதுஸ்தாபனங்களும் வேண்டிய ஆக்கத்தையும் ஊக்கத்தையுமளிக்கக் கடமைப்பாடுடையவர்கள். தமிழ்ப் பகுதியிலுள்ள சகல பாலர்கல்வி நிலையங்களையும் இவ்வமைப்பின்கீழ் கொண்டுவருதல் பற்றி இக்கட்டத்தில் சிந்திப்பது பொருத்தமானதாகும்.

அறவழிப் போராட்டக்குழுவின் ஏழாண்டு சேவை பூர்த்தியாகும் இந்த வேளையில் எமது இனத்திற்கு அவர்களாற்றும் தொண்டுக்கு நன்றிகூறி, இப்பணிகளை மேலும்தொடர ஆண்டவனின் ஆசிர்வாதங்களை வேண்டி வாழ்த்துகிறேன்.

க. கோபாலகிருஷ்ணன்,
துணை அதிபர், நவீல்ட் பாடசாலை,
மாவட்ட சாரண ஆணையாளர்,
ஆலோசகர், கல்விச் சேவைக்குழு. அ. போ. கு.

---

## *இவர்கள் பணிமனைத்தொண்டர்கள்:

செல்வி வீரசிங்கம் தர்மினி (பத்திரிகை முதலுதவி)

செல்வி கந்தையா ராகினி (அகதி. பிரார்த்தனை
திரு. எஸ். சீ. எஸ். தங்கராஜா (பாடசாலை —அகதி)

திரு. எம். மார்க்கண்டு (மனித உரிமை — பொது)
திரு. சண். காளிதாஸ் (நூலகம் — எஸ். சீ. ஜ.)
செல்வி நவரத்தினம் பவானி (பனம்பொருள் பயிற்சி)
திரு. க. ஜீவகதாஸ் (நிர்வாக இயக்குனர்)

> நல்ல மனிதன் ஒருவன் தன் இருதயத்திலுள்ள நற்பண்பின் குவியலிலிருந்து நல்லதைக் கொண்டு வருகிறான். தீயவன் ஒருவன் தன் இருதயத்திலுள்ள தீயபண்பின் குவியலிலிருந்து தீயதை வெளிக்கொண்டு வருகிறான். ஏனெனில் இருதயத்தின் நிறைவிலிருந்து வாய் பேசுகிறது.
>
> —கிறிஸ்து

# செய்தி உலகில்

## சமூக அநீதியை அகற்ற அறவழியால் தான் முடியும்

### அமெரிக்க மாது அறிவுரை

(மட்டுவில்)

"அறவழியில் தான் சமூக அநீதிகளை அகற்றி புதிய சமுதாயத்தை உருவாக்குவது சாத்தியமாகும் அதுவே பல பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வையும் தரவல்லது. எந்த வகையிலும் வன்முறையால் முழுமையாக இதனை சாதித்துவிட முடியாது. காந்தியு. சாதனைகள் இதனையே நமக்குக் கற்றுத்தருகின்றன அபாயகரமான ஆயுதங்களைவிட அகிம்சை நெறியிலான ஆத்மீக பலம் பெருமளவு சக்தி வாய்ந்தது."

இவ்வாறு அமெரிக்க வாழ்வு நிலையத்தில் இருந்து இங்கு வந்துள்ள திருமதி ஜோஆன மேஸி கைதடியில் இடம்பெற்ற அறவழிப் போராட்டக் குழுவினரின் கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினர்,

"உலகின் பல பாகங்களில் இன்று காந்திய போதனைகட்கு சாதனை வடிவம் கொடுத்து காந்தீயம் என்ற வாழ்வு நெறி கடைப்பிடிக்கப்படுகின்றது. இலங்கையின் வடபிராந்தியத்தில் இடம்பெறுவதாக காணப்படும் சமூக ஏற்றத்தாழ்வுகள் அநீதிகள் எந்த மனிதாபிமானம் உடைய சமூகத்திலும் இடம்பெற முடியாது. இன்றைய அறிவியல் உலகில் இவற்றுக்கு இடம் இல்லை. மக்கள் எவரும் அடிப்படையில் சம உரிமை உடையவர்களாகவே இருக்கின்றனர். பிறப்பால் அனைவரும் சமமே, இடையில் கற்பிக்கப்படும் பேதங்கள் அர்த்தமற்றவை" என்றும் அவர் மேலும் சொன்னர்.

"அறவழிப் போராட்டம் உடனடியான பலனைத் தரும் என்று எண்ணிவிடுவதும் புத்தியானதல்ல. நேர்மையும் நிதானமும் பொறுமையும் சத்திய நெறியும் என்றும் தோல்வியடைந்ததாக வரலாறு இல்லை. காலம் கடந்தாலும் பின்மாறுபட முடியாத ஒரு தீர்வு சமாதானம் கிடைத்தே தீரும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

வீரகேசரி, 7—5—80

## 50 வருடகால உயிர்ப்பலி நிறுத்தப்பட்டது

### அறவழிப் போராட்டக்குழு முயற்சி வெற்றி

(யாழ்ப்பாணம்)

மறவன்புலவு முத்துமாரி அம்மன் ஆலயங்களில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற இருந்த உயிர்ப்பலி சாவகச்சேரி அறவழிப் போராட்டக்குழுவின் தீவிர முயற்சியால் தடை செய்யப்பட்டது.

சுமார் 50 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வந்த உயிர்ப்பலியிடுதலை கடந்த வருடம் அறவழிப் போராட்டக்குழு தடுப்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் நிலையம் செல்லாது பிணக்குகளை தீர்க்க நடுவர் குழுக்கள் நியமனம்

### அறவழிப் போராட்டகுழு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் தமக்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகளைத் தாமாகவே தீர்த்துக்கொள்ளவேண்டும் பொலிஸ் நிலையம் செல்லும் அளவுக்கு அதனை பெரிதுபடுத்தக்கூடாது.

இவ்வாறு வலியுறுத்தும் தீர்மானம் ஒன்று சனிக்கிழமை முற்பகல் நடந்த அறவழிப் போராட்டக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன் பொருட்டு ஊர்கள் தோறும் நடுவர் குழுக்களை அமைப்பதெனவும் முடிவு செய்தனர்.

திரு. சி. கதிரவேற்பிள்ளை எம். பி.யின் வாசஸ்தலத்தில் நடந்த இக்கூட்டத்தில் அவரும் திரு. கு. நேசையா திரு. க. சச்சிதானந்தன் முதலான மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். திரு. துரைராஜா தலைமைவகித்தார்.

அங்கு நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

உண்மையைப் பேசுவதுடன் வதந்திகளைப் பரப்பாமலும், பரவுவதற்கு இடமளிக்காமலும் மக்களை நடக்கச் செய்வது.

மதுமானம், சிகரெட் முதலான லாகிரிப்பொருட்களின் பாவனையை ஒழித்தல். உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு முதலிடம் அளித்தல்.

ஆலய உற்சவங்கள் திருமண வைபவங்கள் ஆகியவற்றை ஆடம்பரமின்றி சிக்கனமாக நடாத்துதல்.

இத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக இன்று திங்கட்கிழமை திரு கு நேசையாவின் வாசஸ்தலத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வீரகேசரி,
30—7—79,

இவ்வருடமும் உயிர்ப்பலியிடுதலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றபோதிலும் அறவழிப் போராட்டக் குழு அரசாங்க அதிபர், உதவி அதிபர் ஆகியோருடன் உடன் தொடர்புகொண்டதைத் தொடர்ந்து தக்க தருணத்தில் உயிர்ப்பலி தடைசெய்யப்பட்டது.

பல ஆண்டுகாலமாக சமத்துவ வழிபாட்டிற்கு இருந்த தடையும் நேற்றுடன் முடிவுற்றது குறிப்பிடத்தக்கது.

அறவழிப் போராட்டக்குழுவின் முயற்சியின் பேரில் ஒரே நேரத்தில் இருவிடயங்கள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

ஈழநாடு,
1980.

# பாட்டாளி மக்களின்
## துயர் துடைப்பதில் அறவழி இயக்கம்

நமது பகுதியில் நலிந்த மக்கள் தாழ்த்தப்பட்டோர் செல்வந்தர் வறியோர், வசதி படைத்தவர் வசதியில்லாதோர் என்றெல்லாம் எம் மக்கள் பிதற்றிக் கொண்டு இருந்தமைக்கு முற்றுப் புள்ளி வைக்க எண்ணியதுபோல் இன்றைக்கு 7 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1979ம் ஆண்டு மாசி மாதம் 25ந் திகதி தோற்றியது அறவழிப் போராட்டக்குழு. போராட்டக்குழு என்னும் பதத்தைக் கேட்டவர்கள் இதை ஒரு ஆயுதம்தாங்கிப்போராடும் குழு என எண்ணியவரும் உண்டு. ஆனல் உண்மையே வேறு, அதன் பெயருக்கு அமைய அறத்தின் வழியில், அகிம்சை வழியில் மக்களுக்கு போதனைகள்மூலமும், கருத்தரங்குகள்மூலமும் அறிவை ஊட்டி நலிந்த மக்களும் மனிதர்கள் தான் என்ற உணர்ச்சியை உண்டு பண்ணி நலிந்த மக்கள் மெலிந்த மக்களின் பொருளாதாரத்தை பெருக்கவும் சமத்துவத்தை உண்டுபண்ணவும் அயராது உழைத்து ஒரு குழு தோன்றியதென்றல் அதுதான் அறவழி போராட்டக்குழு. அப்படியான குழு ஒன்றே ஒன்று தான் இன்று வடபகுதியில் இயங்குகிறதென்றல் மிகையாகாது, இப்பகுதியில் பல்லாண்டு காலமாக குழுக்கள், சங்கங்கள், அமைப்புகள் என்று பல தோன்றினது என்றல் உண்மைதான் ஆனல் அவற்றில் எத்தனை சுயநலமற்ற பொதுநல மனப்பான்மையுடன் இயங்கின இயங்குகின்றன என்று பார்த்தால் விடை பெரும்பாலும் பூச்சியமாகவே இருக்கும். அமைப்புக்களும் சங்கங்களும் தோன்றும்பொழுது இருந்த நோக்கங்களும் கொள்கைகளும் காலகதியில் புதைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு சுயநல நோக்கங்களும் புகுத்தப்படுவதை நாம் அனேகமாக காணக்கூடிய இக்காலகட்டத்தில், முன் வைத்த காலை பின் வைக்காது ஆதிக்கொள்கைகளை கடைப்பிடித்து தன் வளர்ச்சியிலும் சமூகத்தின் நல் வளர்ச்சியிலும் அயராது உழைத்துக்கொண்டு இருக்கும் 'அறவழிப் போராட்டக்குழு'' என்னும்பொழுது நாம் பூரிப்படையாது இருக்கமுடியாது.

சென்ற ஏழு ஆண்டுகளாக இது பல பகுதிகளிலும் உள்ள நலிந்த மக்களை மேம்படுத்த அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்த சமத்துவம் என்னும் அடிப்படையில் அவர்கள் வாழ்க்கை நடத்த வழி வகுத்த ஒரே அமைப்பு அறவழிப் போராட்டக் குழுவே தான். மதரீதியாக வழிபாட்டிற்கு மறுக்கப்பட்டிருந்த 100க்கும் அதிகமான இந்து ஆலயங்கள் இக்குழுவின் அயராத உழைப்பினலும் சாதுரிய அணுகு முறையினுலும் அனைவரினதும் வழிபாட்டுக்கும் திறந்து விடப்பட்டதென்றல் அது ஓர் சாதனையென்றே கூறலாம். பண்டைக் காலம் தொடக்கம் இந்து ஆலயங்களில் மூடத்தனமாக நடைபெற்று வந்த உயிர்ப்பலி தப்பானதென எண்ணியதால் சட்டரீதியாக இப்பேற்பட்ட அநாவசிய கொலையை தடை செய்த பெருமையும் இக்குழுவினருக்கே சாரும். இதனல் உயிர் தப்பிய ஆயிரமாயிரம் சீவன்கள் இன்று பேச்சுத்திறன் இருந்தால் இவ் அறவழிப் போராட்டக் குழுவைப் போற்றித் துதிக்கும்.

இவர்கள் சேவை இவற்றுடன் நிற்கவில்லை 1983 ஆடி இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு தெற்கில் இருந்து வடக்குக்கு ஓட்டம் பிடித்து வந்த தமிழ்ச் சமுதாயத்துக்கும் அகதிகளுக்கும் ஆறுதல் கூறி அன்புடன் அரவணைத்து முடிந்த உதவிகளை செய்து தேவைப்பட்டவர்களுக்கு முகாம்களை அமைத்து கொடுத்ததுடன் இன்னும் பல உதவிகளையும் செய்தவர்கள் என்னும் வரிசையில் முன்னணியிலும் இக்குழு நிற்கிறதென்றல் இது எவராலும்மறுக்க முடியாது என்றே கூறவேண்டும்.

பணம்படைத்தவர்களும் நகரப்புறங்களில் வசிப்போரும் தம் குழந்தைகளை சிறுவர் பாடசாலைக்கு அனுப்புவதைக் கண்ணுற்று மனங்கலங்கிய சாதாரண மக்களினதும் நலிந்த மக்களினதும் பிற்போக்குப் பகுதிகளில் வசிக்கும் மக்களினதும் துயர் போக்க வடமாகாணத்தில் பல்வேறு பின்தங்கிய பகுதிகளில் சிறுவர் பாடசாலைகளை ஆரம்பித்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும் பொறுப்பாக்கி நடத்தப்படும் பாடசாலைகளின் முன்னேற்றத்தை 15—12—86ல் தமிழ்ச் சிறுவர் தினத்தன்று நடத்தப்பட்ட கலைவிழா நிகழ்ச்சிகள் பின் தங்கிய பகுதிச் சிறுர்களின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

இதுவரை 300க்கும் அதிகமான படித்த இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி பயிற்சி அளித்திருக்கின்றனர். பல பொதுத்தொண்டுகளில் ஈடுபட்டு பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு வலுவூட்டி வருவதையும் நாம் காணமுடிகிறது. உதாரணமாக மரநடுகைக்கு ஊக்குவிப்பு, பொதுஸ்தாபனங்களை தமது தொண்டர்களின் உதவியுடன் துப்பரவு செய்தல் முதலிய தொண்டுகளுடன் வைத்தியர்களின் உதவியைப் பெற்று அகதி முகாம்கள், குடியேற்றத்திட்டங்கள் முதலியவற்றிக்கு இலவச வைத்திய சேவைகளையும் கிரமமாக நடத்துகின்றனர். இவர்களுக்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதுடன் அவற்றின் ஊக்குவிப்பும் உண்டு. இன்றைய கால கட்டத்தில் வெளிநாடுகளின் உதவிகளையும் பெற்று அதன் முழு வருவாயை

(18ம் பக்கம் பார்க்க)

# சமுதாயப்பணியில் சாதனை

க. நடராசா.
தலைவர், பனை அபிவிருத்திச்சபை

தற்போதைய சூழ்நிலையில் எமது மக்களுக்காக அறவழிப் போராட்டக் குழு துணிந்து சில நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருவது பாராட்டிற்குரியது. பாலர்முதல் வயோதிபர்வரை ஓர்வித விரக்திஉணர்வுடன் வாழ்ந்துவரும் சமுதாயத்தில், இக்காலகட்டத்தில் பிறந்த மூன்று, நான்கு வயதுப் பராயத்தை அடைந்த எமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு அறவழிப் பேராட்டக் குழு கிராமங்கள்தோறும் பல பாலர் பாடசாலைகளை அமைத்தும், விஸ்தரித்தும் வருவது முன்மாதிரியானதும், நல்லதொரு முயற்சியுமாகும்.

சின்னஞ் சிறுசுகளின் பிஞ்சு மனத்தில், அறம், அகிம்சை, சாத்வீகம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று- சகோரத்துவம், அறிவாற்றல் போன்றவற்றைப் பாலர் பாடசாலைகள் மூலம் புகட்டிவருவது பொருத்தமானதும் மகத்தான பணியுமாகும், உலகெங்கிலும் இதே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அமைப்புக்களும், ஸ்தாபனங்களும் உள்ளன. இந்நாட்டிலும் இந்நோக்கத்தை மையமாகக் கொண்டு அமைப்புக்கள் பல்வேறு ரூபத்திலும் இயங்கி வருகின்றன. இவ்உயரிய நோக்கங்களைக்கொண்ட அமைப்பு ஒன்று எம்மத்தியில் எமக்குத் தெரிந்தவர்களால நடாத்தப்படுவதால் எம்மவர் குறைவாக மதிப்பிடக்கூடும். அறவழிப் போராட்டக்குழு சீரிய இலட்சியங்களைக் கொண்டு செயற்பட்டு வருவது எனக்குப் பெருமிதம் அளிக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அறவழிப் போராட்டக் குழுவினரிடம் நான் விடுக்கும் வேண்டுகோள் 'பாலர்' சமுதாயத்தைக் கௌரவிக்கும் என்று திடமாக நம்புகின்றேன். எமது பிரதேசத்தில் சிறுவர்களின் கல்வி. அறிவு, ஆற்றல் கலைத்திறன் ஆகிய வற்றை வெளிக்கொணர்ந்து ஊக்குவிக்கக் கூடிய சிறுவர் சஞ்சிகை ஒன்று இல்லாத குறை உள்ளது. அறவழிப் போராட்டக்குழு தற்போது வெளியிட்டு வரும் ''அறவழி'' சஞ்சிகையைச் சிறுவர் சஞ்சிகையாக வெளியிடுவது மிகுந்த பயனுள்ளதாக அமையும். சமுதாயப் பணிகளில் பல சாதனைகளை ஈட்டி வரும் அறவழிப் போராட்டக்குழு இந்த வகையிலும் 'சாதனை' புரியும் என்று நம்புகிறேன். இப்பணிக்கு எமது பரிபூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளேன்.

## பாட்டாளி மக்களின்.........

( 17ம் பக்கத் தொடர்ச்சி )

யும் பொதுநல சேவை அதுவும் பின்தங்கியயற்றோரின தும் வசதியற்றோரினதும், பாட்டாளி மக்களினதும் சேவைக்கு ஈடுபடுத்தும் ஓரேயொரு ஸ்தாபனம் அறவழிப் போராட்டக் குழு தான் என்று கூறின் மிகையாகாது. இதுமட்டுமல்ல அவர்களின் சர்வ தேச ஸ்தாபனங்களின் தொடர்பை பயன்படுத்தி இன்று எமது தமிழ்ப்பகுதிகளில் நடக்கும் மனித உரிமை மீறல்களை காலதத்திற்கு காலம் சர்வதேச மன்னிப்புச்சபைக்கு (Amnesty International) தகவல் கொடுத்து தமிழர்களின் அவல நிலையை உலகறியச் செய்கின்றனர். இதன் வளர்ச்சிக்கு அயராது உழைக்கும் தலைவருக்கும் செயலாளருக்கும் உறுதுணையாக நிற்கும் ஏனைய தொண்டர்களின் கடமை உணர்ச்சி ஏனைய ஸ்தாபனங்களுக்கு ஓர் முன்மாதிரியாக அமைய வேண்டும். இவர்களின் இவ் அளப்பரிய சேவை முன்னேற இவர்கள் இன்னும் மக்களின் சேவைக்காக நியாயமாக உழைக்கும் அமைப்புக்கள் சிலவற்றை தேர்ந்தெடுத்து அவர்களுடனும் இணைந்து செயற்பட்டால் இன்னும் கூடிய சேவையை ஆற்றமுடியும் என்பதே என் கருத்து. அத்துடன் தொண்டர்களாக ஆசிரியர்களையும், வைத்தியர்களையும், விவசாய ஆசிரியர்களையும், விவசாய உத்தியோகத்தர்களையும் இணைத்து அவர்களின் பங்களிப்பை பெற்று மக்கள் நலனைப் பாதுகாக்கவேண்டும் என்பதும் என்வாஞ்சை. மக்கள் நலனை கருத்தில் கொண்டு மனிதர்களை மாக்களாக எண்ணிய காலம் மலையேறிவிட்டதாக எண்ணப்பண்ணி நலிவுற்றோரின் விடிவுக்காகவும் பின்தங்கியோரின் முன்னேற்றத்திற்காகவும் பாட்டாளி மக்களின் உயர்ச்சிக்காகவும் வெற்றிகரமாக ஏழாண்டு வீர நடைபோட்டு அதிலும் அழகு வெற்றி கண்ட அறவழிப் போராட்டக்குழுவை போற்றுவதிலும் அதன் வழியை மென்மேலும் அயராது உழைக்க அனைவரின் ஒத்துழைப்பும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் ஆசீர்வாதமும் கிடைக்கவேண்டுமென இறைவனை பிரார்த்திக்காமல் எம்மால் இருக்க முடியுமா?

டாக்டர் த. சிங்கராசா.
கௌரவ செயலாளர்.
புனர்வாழ்வு மருத்துவ சேவைகள் ஒன்றியம்.
தென்மராட்சி.

## ஒளிவிளக்கு.....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்களைப் பல தாபனங்களில் கண்டிருக்கின்றோம். அநேக ஸ்தாபனங்களில் செயலாளர்களின் செயல்பாடுகள் இல்லாமல் மறைந்துவிட்டன. ஆனல் அறவழிப்போராட்டக் குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் செயலாளர் என்ற பதத்திற்கு பொருத்தமானவர். செயலாளர் நாயகம் என்ற பதம் இவர் போன்றவர்களிலிருந்துதான் உதித்திருக்கவேண்டும். ஏனெனில் இந்த செயலாளர் நாயகம் இல்லாதிருந்தால் இத்தாபனத்திற்கு இவ்வளவு பெருமையோ புகழோ கிடைத்திருக்கமாட்டாது.

இவர்களை எல்லாம் நாம் புகழவில்லை; மேலாகக் கூறவும் இல்லை. இவர்கள் செயல்பாட்டுக்கு எம் வார்த்தைகள் எம்மாத்திரம். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலான இறைவன் செயல்பாடே இத்தாபனத்திற்கு மேலாகக் கிடைக்கிறது. 'இதனுல்தான் இத்தாபனம் மேம்படுகிறதென்றுல் அதுவே முற்றிலும் உண்மை.

## மனிதனின் மதிப்பை அவன் ஏற்படுத்திய நிறுவனத்தால் கணக்கிடவேண்டும்

காந்திஜி ஏர்வாடா சிறையில் இருந்தார். கரீம் நகரைச் சார்ந்த மிஸ் மேரி பார் காந்தியடிகளை சந்திக்க வந்திருந்தார். அவள் கிராமத்துக்குச்செல்ல விரும்பினாள். இது சம்பந்தமாக அவளுக்கு சாந்திநிகேதனைப் பற்றிய ஓர் சந்தேகம் எழுந்தது. காந்தியடிகள் அதற்குப் பதில் அளித்தார்.

''இந்திய உபகண்டத்தில் சாந்திநிகேதனம் ஓர் தனிப்பட்ட இடம். ஒருவேளை இது இவ்வுலகத்திலேயே ஓர் தனிப்பட்ட இடமாகவும் இருக்கலாம். ஆம், அங்குள்ள சில விஷயங்கள் எனக்குப் பிடித்தமில்லை. ஆனால் கிராமத்திலுள்ள வேலைகளை பார்க்க விரும்புபவர்களுக்கு சாந்திநிகேதனில் நடைபெறும் வேலையையும் பார்க்கவேண்டும் என்ற யோசனையை நான் கட்டாயம் சொல்வேன்.''

அதன்பின் ஆசிரமத்தின் உள்ளே சென்று பார்க்கும் யோசனையை கூறும்போது காந்தி சொன்னார் ''ஆசிரமத்தைப் பார்க்கும்போது என்னைப்பற்றியும் தாங்கள் எடை போடவேண்டும். என்னிடம் பொய்யான பணிவு கிடையாது. நான் எப்படி இருக்கிறேனோ—அதற்கு நேர்மாறாக என்னைப்பற்றி விவரிக்கும் நண்பர்களும் இருக்கிறார்கள். ஆனால் மனிதனுடைய, உயர்வையும் - பெருமையையும் அவன் ஏற்படுத்திய நிறுவனத்தினால் கணக்கிடவேண்டும். எப்படி கவிதாகூரின் பெருமையைப்பற்றி எண்ணும்போது சாந்திநிகேதனைப்பற்றி நினைக்கிறோமோ அதேபோன்று என்னுடைய மதிப்பைக் கணக்கிடும்போது இந்த ஆசிரமும் மனக்கண் முன் வரவேண்டும்.

## *இவர்களே இயக்குனர்கள்

திரு. வீ. எஸ். துரைராஜா (கல்வி இயக்குனர்)
திரு. வீ. ஜி. தங்கவேல் (நிதித்துறைஇயக்குனர்)
திரு. எஸ். சீ. எஸ். தங்கராசா (கிராமியப்பணி கலை, கலாச்சார இயக்குனர்)
திரு.இ.பேரம்பலம் (தமிழ்பத்திரிகைஇயக்குனர்)
திரு. அ. குணசேகரம் (இயக்குனர்)
திருமதி ஈஸ்வரி ஜீவகதாஸ் (இயக்குனர்)
திருமதி கனகம்மா தங்கராசா (இயக்குனர்)
திரு. க. ஜீவகதாஸ் (செயலாளர்)


# அறவழி

சுவிற்சலாந்து தோழமை இணக்க இயக்கத்தின் ( Swiss For ) ஆதரவு ஊக்குவிப்புடன், அறவழிப் போராட்டக் குழுவினால் வெளியிடப்படுவது அறவழி மாத இதழ்.

அறவழி சமாதானக் கருத்துக்களையும் சமுதாயச் சிந்தனைகளையும் மக்கள் மத்தியில் பரப்பி மக்களை நல்வழிப்படுத்துதலே இப்பத்திரிகையின் முழு முதல் நோக்கமாகும்.

**பத்திரிகைக்குழு:**

இ. பேரம்பலம், சண். காளிதாஸ் செல்வி, வீரசிங்கம் தர்மினி, வீ. எஸ். துரை ராஜா, வீ. ஜீ. தங்கவேல்.

**ஆசிரியர்:**

க. ஜீவகதாஸ்.

**வருட சந்தா:**

*12 இதழ்: ரூபா 30 (தபாலில்)*

**தொடர்பு கொள்க:**

அறவழி
த பெ. இல: 2
சாவகச்சேரி.


## மக்கள் பாதிப்பு நீங்க பிரார்த்திப்போம்!

நாட்டில் விசேடமாக வட மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பல்வேறு விதமான தடைகளால் தினமும் பாதிப்படைந்து வருகின்றனர். இத்தடைகள் மூலம், மக்கள் அனுபவித்து வருகின்ற கஷ்டங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவைகளாகும்.

அரசின் திட்டமிட்ட பொருளாதார எரிபொருள் தடைகள் காரணமாக, மக்களின் அன்றாட அலுவல்களில் பெரிதும் சிரமமும், துன்பமும் எதிர்நோக்கியுள்ளன.

அத்துடன், வடபகுதியில் இயங்கிய, மக்கள் வங்கிக்கிளைகள் தற்காலிகமாகப் பூட்டப்பட்டதன் காரணமாக வெளிநாட்டில் வாழ்கின்ற உழைப்போரின் ஊதியத்தில் மட்டும் வாழ்க்கையைக் கொண்டு சென்ற ஆயிரமாயிரம் குடும்பங்களும் பட்டினிச்சாவை எதிர்நோக்கக் கூடிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன,

வடபகுதி மக்களுக்குத் தேவையான மருந்து, பால்மா வகைகளும் மற்றும் அத்தியவசியப் பொருட்களும் வந்து சேராமல் இருப்பதும் பாதிப்புக்களில் முக்கிய அம்சமாகும்.

எனவே, அரசின் அடக்குமுறைகள் நீங்கவும், குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் பாதிப்புக்கள், தடங்கல் வழமைக்கு வரல் வேண்டும் என மக்கள் அனைவரும் ஒருமித்து பிரார்த்திபோமாக



உழைப்பே

உயர்வுக்கு வழி

— மகாத்மா காந்தி.

உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கெடுப்போம். உள்ளூர்உற்பத்திப்பொருட்களுக்கு ஆதரவு கொடுப்போம்.

பிரகாசமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்

25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அப்பியாசக்கொப்பி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்,** யாழ்ப்பாணம்.



## அறவழி இயக்கத்தின்

**அறப்பணி வளர்க!**

தங்கள் இல்லத்திற்கு வேண்டிய தொலைக்காட்சிப்பெட்டிகள், மின் சார உபகரணங்கள், வானொலிப் பெட்டிகள், அலங்காரப் பொருட்கள் பெற்றுக்கொள்ளவும்.

சிறந்த வீடியோ படப்பிடிப்பு, ஒலிப் பதிவுத் தேவைக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்!

## ரெலிகோணர்

**நவீன சந்தை மேல்மாடி,**

**சாவகச்சேரி.**

**கிளைகள்: யாழ்ப்பாணம், கொடிகாமம் கிளிநொச்சி.**



# அறவழிப் போராட்டக்குழுவின் சமுதாயப்பணிதொடர எம் ஆசிகள்

## அழகு சாதனப்பொருட்கள் கற்பகம் விற்பனை நிலையங்களை இன்றே நாடுங்கள்

ஆரோக்கிய வாழ்வுக்கு

- பாணிப் பனுட்டு
- பனம் பானம்
- பனம் ஜாம்
- பனம் சிரப்
- பனம் கோடியல்
- கைப்பணிப் பொருட்கள்

# பனை அபிவிருத்திச் சபை

**தேசிய வீடமைப்புச் செயலகம்**

**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி: 23801.**


இப்பத்திரிகை அறவழிப்போராட்டக்குழுவினால் யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் மாசி 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.